[illegible]

V2: No: 3 17 Jan 1929

SL
[illegible], N28K4
N29'2-3.
189038

KALANILAYAM. தனிப்பிரதி ரு. 0 3 0

கலா நிலயம்

வியாழன் தோறும் வெளிவரும்

வருஷ சந்தா
உள் நாடு ரு. 7 8 0
புற நாடு ரு. 9 0 0

காரியாலயம்:—
No. 11, வேளாளர் தெரு,
புரசைபாக்கம், சென்னை

Vol 2.] 1929 ஞு ஜனவரிமீ 17உ [No. 3.

பொருளடக்கம்.

		பக்கம்.			பக்கம்.
1.	தலையங்கம் (Leader).	41	5.	கம்பராமாயணம் T. N. சேஷாசலம் B. A., B. L.	50
2.	வில்லிபாரத விளக்கம். T. S. நடராஜ பிள்ளை B. A., B. L.	43	6.	அகப்பொருள் K. இராமரத்நம் ஐயர் B. A.	52
3.	அப்பர் E.N. தணிகாசல முதலியார் B. A., B. L.	46	7.	இக்கால இஸ்லாம் ஜஸ்டிஸ் M. K. அக்பர்	56
4.	தமிழ்ப் பாடம்	48	8.	வர்த்தமானம்	59

சந்தாதாரராய்ச் சேர விரும்புவோர் எந்தத் தேதியிலிருந்து சேரலாமாளுலும் கட்டுரைகள் பல தொடர்ச்சியாய் வருவதால் முன்னிதழ்களையும் பெற்றுக்கொள்வது நலம். வி. பி இல் அனுப்பச் சொல்வதைக் காட்டிலும், தொகையை மணியார்டர் செய்வதால் செலவு குறையும். ஸிங்கப்பூர் பினங் தென்னாப்பிரிக்கா முதலிய புறநாடுகளுக்கு வி. பி. யில் அனுப்ப இயலாது. மானேஜர்.

கலா நிலயம்.

189038

உரிமையின் பொய்மை.

எந்தவகையில் பார்த்தாலும் இக்காலத்தில் எல்லாந் தலைகீழாய் நிகழ்வதைக் காணக்காணத் திகைப்பு மேலிடுகின்றது. வாஸ்தவத்தில், தலையால் நடந்து காலால் நினைக்கின்றவர்களல்லராயின் இக்கால மாந்தர் 'உரிமை உரிமை' என்று இப்படி அலைந்து திரிந்து ஆரவாரஞ்செய்யமாட்டார். தன் கடமையைச் செய்வதற்குச் சோம்புகின்றவனுக்கே உரிமையின் நினைவு உறுத்தத் தலைப்படும். முன்னாட்களில் ஒருதிறத்தார் ஆற்றவேண்டிய கடமை எவையெவை யென்று வற்புறுத்தப்பட்டனவோ, அவையாவும், இந்நாட்களில் மறுதிறத்தார் உரிமையென வாதாடப் பெறுகின்றன. திருக்குறள் நாலடியார் போன்ற நீதி நூல்களிலாகட்டும் வடமொழியிலுள்ள தர்மசாஸ்திரங்களிலாகட்டும் இன்னார்கடமை இவையிவை யென வகுத்திருக்கக் காண்போமே யல்லாது, அக்கடமை யார்மாட்டுச் செலுத்தவேண்டுமோ அவ்வவர் அக்கடமையைப் பெற்றுக்கொள்ளும் உரிமையையுடையவர் என்னும் நினைவு பாராட்டப் பட்டிருக்கக் காணமாட்டோம். அரசன் கடமை குடிகளின் கடமை, பெற்றோர் கடமை மக்கள் கடமை, புருடன் கடமை மனைவியின் கடமை, ஆசிரியன் கடமை மாணவர் கடமை, எசமான் கடமை ஏவலாளன் கடமை, என்று இருதிறப்படுத்திக் கருதவேண்டிய உறவுகளில் கடமை என்னும் கருத்தொன்றே முன் நிற்கும். மற்றபடி பொதுவாக விவகரிக்கவேண்டிய வேளைகளில் மானுட தர்மம் மததர்மம் ஜாதிதர்மம் குலதர்மம் என்று அவ்வவ் நிலைகளில் அவரவர் ஆற்றவேண்டிய தர்மம் யாதென நிறவியுள்ளார். தருமம் கடமை என்பன, பொதுவாகவேனும் குறித்த ஒருவருக்கேனும், தான் செய்யவேண்டியன. இதனைச் செய்வதற்குச் சாதாரணமாக ஓரளவு சுயநலத்தைத் தவிர்த்துக்கொள்ளல் இன்றியமையாதென்பது வெளிப்படை. மற்றுத் தனக்குப் பிறர் கடமையாய்ச் செலுத்தவேண்டியதை வற்புறுத்திக்கேட்பது உரிமையைக் கொண்டாடுவதாகும். கடமையைச் செய்வதைக்காட்டிலும் உரிமைக்கு அங்காந்திருப்பதுஎளிது. "ஆனால் நீஉன் கடமையைச் செய்யவேண்டியவனேயன்றிப் பிறர் உனக்குச் செலுத்தவேண்டிய கடமையைக் கேட்கும் உரிமை உனக்கு இல்லை" என்ற கொள்கையே முன்னாட்களில் நம் இந்தியர் வாழ்க்கையை நடத்தியதென்பதற்குப் பொய்யாத சான்றுகள் பல நம் இலக்கியங்களிலும் சரித்திரங்களிலும் உள. நம்மிடையே, தற்கால நவநாகரிக 'பிரசாரங்களால்' 'முன்னேற்றம்' அடைந்திராத சில மாந்தர்கள் இன்றுங்கூட இக்கொள்கையால் தம் வாழ்நாட்கள் நடத்துவதை ஓரோவழி காணலாம்.

உண்மையிலே உரிமை என்பது ஒன்று இல்லையே இல்லை. அப்படி இருக்குமாயின், அவனவன் தன் கடமையைச் செய்வதற்கிருக்கின்ற உரிமையல்லால் பிறிதில்லை. ஆம், மற்றவன் தனக்குச் செய்யவேண்டிய கடமையைச் செய்யாதுவிட்டாலோ! விட்டாலென்? அவன் செய்யவேண்டிய கடமையைச் செய்திலன்

அவ்வளவே! அதனல் அக்கடமையை இறக்குமோர் உரிமை உனக்கு ஏற்பட்டதென்று எண்ணவேண்டா. அதனை இறக்கக்கூடாது என்னுங் கடமையே உன் வரையில் இரட்டிக்கின்றது. ஆதலால், நீயுன் கடமையைச் செய்கின்றஉரிமையும் பிறர் தம்கடமையைச் செய்யாதகாலத்து அதனைக் கேட்காதிருக்கின்ற கடமையும் உனதாம். இவ்விதி கடந்த வாழ்க்கையெல்லாம் வீணழிவிற்கு வழிப்படுத்த நாம் இக்காலம் நாடோறும் கண்கூடாகக் கண்டுவருகின்றோமன்றோ!

உரிமை யென்பது பொய்; மெய்வாழ்க்கை வாழ்ந்த இந்தியர் அறியாதது. ஆதலின், உரிமை யென்னும் இப்பொய்யை நாம் இன்று பிறநாடுகளிலிருந்து கற்று அதுவே மெய்யென்றுவிவகரிக்கின்றோம். பொய்யைப் பற்றிச் செய்கின்ற 'பிரசாரங்களெல்லாம்' துன்பத்தைப் பெருக்குமென்பதற் கேதேனும் ஐயமுண்டோ! உரிமையென்று ஒன்றைக் கேட்பவன் தன் கடமையைச் செய்யவேமாட்டான். நாமொருவனுக்கு ஒரு பொருளைக் கடன்கொடுத்தால் வாங்கினவன் அதைத் திருப்பிக் கொடுக்கவேண்டும் என்னுங் கடமை அவனுக்கு உண்டு. ஆனல், அவன் திருப்பிக்கொடுத்திலனுயின் நாமதை வற்புறுத்தி வாங்கிக்கொள்ளும் உரிமை நமக்கு இல்லை. இவ்வாசகம் சிலர்க்குக் கேட்டமாத்திரத்தில் உலகமலைவாகத் தோன்றலாம். இந்த உரிமை உண்டென்றே உலகம் விவகரிக்கின்றது. இந்த உரிமையை நாட்டுதற்கே இருக்கின்ற தரகர்களுக்கும், வக்கீல்களுக்கும் நீதிபதிகளுக்கும் அமீன்களுக்கும் சட்டங்களும், புத்தகங்களும், செலவாகும் பணத்திற்கும் காலத்திற்கும் கணக்கில்லை. எனினும் வழக்கெடுத்து வாழ்ந்தவன் இதுகாறும் எந்த நாட்டிலாகிலும் எக்காலத்திலாகிலும் யாராவதுபார்த்ததுண்டோ! பார்த்ததில்லை, பார்க்கப்போவதுமில்லை என்பதை யாவரும் அறிவர், கூறவும் கூறுவர். ஆனலும், வழக்காடுவதால் வருந் துன்பங்களெல்லாம் சட்டம் சரியாயில்லாததாலும், வக்கீல்களின் வஞ்சனையாலும் நீதிபதியின் தாமதத்தாலும் சாக்ஷிகளின் துரோகத்தாலும் இவையனைய பிறவற்றாலும்நேர்கின்றனவென்று தம்முடைய நிறைந்த அறியாமையால் மதித்துச் சட்டச் சீர்திருத்தங்களிலும் நீதிபதிகள் நிர்மாணஞ் செய்வதிலும் வக்கீல்களின் வழிகளைப் பற்றியும் வாதாடத் தலைப்படுகின்றனர். இங்கிலாந்திலும் மற்ற நாடுகளிலும் பலநூற்றாண்டுகளாக வேண்டிய சீர்திருத்தங்கள் செய்துபார்த்தனரே—என்ன பயன் உண்டாயிற்று? எவ்வாறு உண்டாகும்.! முன் சொன்னபடி உரிமை என்பது பொய்யாதலால், அப்பொய்யை நாட்டுதற்கு முயல்கின்றமுயற்சியால் வருகின்ற கேடு இது. அப்பொய்யை விலக்காது, அதனை நடத்திவைக்கும் முறைகளையும் மனிதரையும் மாற்றுவதால்மாத்திரம் நன்மை உண்டாமென்பது வம்பே

உரிமை என்னுங் கருத்து உண்மை அன்றென்பதற்கு முன்னுரைத்த உதாரணம் உதவுவதுடன், வழக்கெடுப்பவர்இயற்கையில் இன்னுமொரு விஷயமும் காணலாம். பெரும்பான்மை பிறர்மீது கடனிறுங்க வழக்குத்தொடர்பவன் தான் கொடுக்கவேண்டிய கடன்களை எளிதில் கொடான். இந்த நிலைமையும் இன்றியமையாததே. தன்கடமை மறப்போர்க்கே உரிமையின் நினைவு உற உற வந்தழக்கும். மற்றவரை நன்குமதித்து மரியாதையாய் ஒழுகவேண்டுமென்பது ஒவ்வொருவனுக்குங் கடமையாம். இதற்கு மாறாக மற்றவரால் நாம் மதிக்கப்படவேண்டுமென்பது நமது உரிமையெனப் பாராட்டப்புகுகின்றகாலத்தில் நாம் மற்றவரை மதிக்காமலிருப்பதுடன் பழிக்கவும் புகுகின்றதைப் பார்க்கின்றோம். இதுவுமன்றி நமக்கு உரிமை என்று ஒன்று உண்டென்றும், அவ்வுரிமையை நாம் வற்புறுத்துவது முறைமையென்றும் விவகரிக்க நம் மனதைப் பழக்கிக்கொள்வதால் விளைகின்ற தீமைகளின் கொடுமையும் அளவும் எண்ணிறந்தன. நாம் வற்புறுத்தியே வாங்கிவாங்கிப்பழகுவதால் நம்மை வற்புறுத்தாதவர்களுக்குச் செலுத்திவைக்க மனம் வருவதில்லை அப்படி நேரோநின்று வற்புறுத்தாதவர்களுக்கு நாம் செலுத்தவேண்டிய கடமையாவது அவர்கள் கேட்கக்கூடிய உரிமையாவது ஏதுமில்லையென மறுத்துவிடுகின்றோம். கடவுளுக்கு நாம்வழங்க வேண்டிய கடமைகள் எவ்வளவோ உள. அவைகளில் அவரது சிருஷ்டியாயமைந்த ஜீவன்களையெல்லாம் அன்போடு ஆதரிக்கவேண்டுமென்பது முக்கியமானதொன்று. இதனையேனும் இவைபோன்ற பிற கடன்களையும் அக்கடவுள் எதிர்நின்று நம்மிடத்திலிருந்து இறக்கின்றாரோ! இல்லையே. தனக்கும் அவ்வுரிமை இல்லையென்றே முழுமுதற்கடவுளும் கருதியுள்ளார் போலும். அன்றெனின் இறக்கமாட்டாரோ! அவ்வாறு இறக்காததால் நம்மிற்சிலர் 'எம்முரிமை எம்முரிமை' என்று எதிர்வழக்கிட்டுக்கொண்டு கடவுளையும் அவர்க்குறிய கடமைகளையும் அடியுடன் மறப்பவர்களாகிவிட்டோம். ஆயினுமெனின், இந்த நாஸ்திகப் பாவம் எம்மைச்சேர்ந்தாலும் அவ்வாறு ஆக்கிய பொறுப்பு அரசியலிலும் குடிமையிலும் குடும்பத்திலும் 'உரிமை உரிமை' என்று கேட்பதற்குக் கற்பித்தவர்களதே யாம்

கடமையின்நினைவு நசிக்கும்படி உரிமையிலூக்கம் பிறப்பதால்விளைகின்ற கெடுதியை இனிஇக்காலவாழ்க்கையின் ஒவ்வொரு துறையிலும் எடுத்துக்காட்டுவது மிகை. இவ்வுரிமையில் ஊக்குவோர் சிற்சிலசமயங்களில் ஆர்வத்தால் தம்மையே மறந்துபோகின்ற தூரம் நகைப்பதற்கும்இடந்தருகின்றது. சென்றமாதம்வெளிவந்த சஞ்சிகையொன்றில் " இந்தியச் சிறுவர்களின் சாச்வத உரிமைகள் " என்றவோர் ஆங்கிலக்கட்டுரையில், நோயாலும் வறுமையாலும் பீடிக்கப்பட்டிருக்கும் தாய்தந்தையர் தம்மைப் பெற்றிருக்கப்படாது என்று சொல்கின்ற உரிமை சிறுவர்களுக்கு இருக்கின்றது என்று கூறப்பட்டிருக்கின்றது. "ஆகையால், இந்தியாவில் இருக்கின்ற சிறுவர்களெல்லாம் ஒன்றாய்க்கூடித் தக்கமுயற்சிகள் எடுத்துக்கொண்டு தம்மைச் செவ்வனே காப்பாற்றித் தமக்குக் கல்வியும் அழகும் ஆரோக்கியமும் புத்தியும் கொடுப்பதற்கு இயலாத தாய்தந்தையர்கள் தம்மைப் பெற்றிருக்காதபடி பார்த்துக்கொள்வார்களானல் நம் நாட்டிற்கு வரப்போகின்ற நல்ல காலத்திற் பாதி இப்பொழுதே வந்துவிட்டதென்று சொல்லலாம்" என்று அக்கட்டுரையின் ஆசிரியர் மனப்பூர்வமாய்ச் சிறுவரின் உரிமைக்கு மன்றாடுவார்.

OFFICE OF THE ... AR OF ... 1929

வில்லி பாரத விளக்கம்

தோற்றுவாய்

வடமொழியிற் சிறந்த காப்பியமெனப் பெயர் பெற்ற பாரதத்தைத் தமிழிலியற்றித் தன் சொல்வன்மையாலும் நடைப்போக்கினலும் கல்வியிற் சிறந்த பெரியாரெனப் போற்றப்பெறும் வில்லிபுத்தூரார், நமக்கு அணித்தான காலமாகிய பதினைந்தாம் நூற்றாண்டிலேயே வாழ்ந்துவந்தனரேனும், அவருடைய இளமையைப்பற்றியும் இல்வாழ்க்கையைப் பற்றியும் எவரும் ஏதும் அறிந்திலர். ஆங்கில நாடுகளைப்போல் இந்தியநாட்டில் நூற்றலைவருடைய வாழ்க்கை வரலாற்றை உள்ளபடி எழுதிவைத்தார் எவருமிலர். நூற்றலைவரது உண்மை வரலாற்றை நாம் சரிவர அறிந்தாலன்றி அவருடைய அருமைபெருமைகளைச் சீர்தூக்கி உணர்தலறிது. ஆங்கில நாட்டில் சிறந்த நூற்றலைவராய் விளங்கினவரும், ஆங்கிலத்தில் அகராதியை முதன்முதலில் இயற்றித்தந்த புகழ்படைத்தவரும், கல்விக் கழகமொன்றை ஏற்படுத்தி அதன் தலைமணியாய்ப் பொலிவுற்றவருமான 'சாமுயல் ஜான்ஸன்' என்பவரின் வாழ்க்கைவரலாற்றையும் அறிந்ததனலன்றோ, அவர் யாவருக்கும் அஞ்சாத் தறுகணண்மை படைத்தவர் என்பதையும், பொருள்வேண்டிப் பொருள்படைத்தாரிடைச்சென்ற காலத்தும் தன்மதிப்பை இழக்காதவரென்பதையும், நீதிவழுவா நெறிமுறையில் மேம்பட்ட ஒழுக்கத்தினரென்பதையும் அறிந்து அவரிடை அன்பும் அச்சமும் அடைகின்றோம்? பரிசில் வேண்டி அரசனை அடுத்த பாவாணர், அரசன் தன்னைக்காணுமலும், முகமன் கூறுமலும், ஏவலாளரிடம் அனுப்பிய பரிசிலைப் பெறுராய், 'யாம் வேண்டல்'மென்று வேற்றூர்ப் போயினரென்பதை அறிய அவர் பாக்களை அன்புடனும் அகமகிழ்ச்சியுடனும் ஓதுகின்றோமன்றோ? வாழ்க்கை வரலாற்றை விளக்குதலாற்றுன் நாரை விடுதூதாய்ப்பாடின கடிகைமுத்துப் புலவருடைய செய்யுளையும் அவர்தம் வறுமையிற் செம்மையையும் வியந்துரைக்கின்றோம். பாவலர் எவ்வெவ்வாறு தத்தம் இடையூறுகளைக் களைந்து, வறுமை முதலிய இன்னல்களை ஒருபொருட் படுத்தாது தம் கல்விக்கே தம் வாணுட்களை அர்ப்பணஞ் செய்தாரென்று தெரிந்துகொண்டாலன்றி அவர் பெருமையை நாம் அளவிட்டெழுதல் இயலாது.

இவ்வாறு வில்லிபுத்தூராரைப் பற்றி நமக்குக் கிடைக்கக்கூடிய வரலாறு ஒன்றுமில்லை. ஏதோ சிலர் தத்தமக்குத் தோன்றியவாறு அழகுபடப் புனைந்த கட்டுக்கதைகள் சில நம் நாட்டில் உலவிவருகின்றனவேனும், அவைகளின் உண்மை நமக்குப் புலப்பட்டிலது. ஆகையால் அவர் எழுதிய நூலினுட் கிடைக்கும் சில உண்மை ஆதாரங்களைக் கொண்டுதான் நாம் அவர் வரலாற்றை அறியவேண்டியிருக்கின்றது. இவரது மைந்தர் வரந்தருவார் இயற்றியதாய் எண்ணப்படும், சிறப்புப்பாயிரத்திலிருந்து இவர் பார்ப்பனக்குடியிற் பிறந்தவரென்றும், இவருடைய வூர் பெண்ணையாறு பாயப்பெற்ற வளம் பொருந்திய திருமுனைப்பாடி நன்னுட்டிலுள்ளதொரு சனியூரென்றும் தெரியவருகின்றது. இவரது தந்தை வீரராகவர் என்பவர், இவருக்கு இளமையிலேயே கற்பிக்கவேண்டிய கலைகளையெல்லாம், செவ்வனே கற்பித்துப் புலவர்பெருமானுக்கிக் கல்வியிற்றலைசிறந்தவராய் விளங்கவைத்தார். இவர் கற்ற நூல்கள் இன்னின்னவையென நாம் இக்காலத்தில் உய்த்துணர முடியவில்லை. இவர்தங் குலத்துக்குரிய வடமொழியிற் பெரிதும் வல்லவரென்பதற்கு, இவர் இயற்றிய நூலே இவருக்குச் சான்று பகரும். தனிமொழிகள் மட்டுமன்றி, சொற்றடர்களும் முழுவரிகளும் வடமொழிகளாலேயே அமைந்திருத்தலை, நூலைத் தொட்டதொட்ட இடந்தோறும் காண்கின்றோம். இஃதொழியத் தென்மொழியில் இவர்பயின்ற நூற்கள் எவையென ஆராயுங்கால், இவர், வள்ளுவர் குறளையும், கம்பர் இராமாயணத்தையும் ஆழ்வார் பிரபந்தங்களையும் ஓதியுள்ளாரென்பது நன்கு புலப்படுகின்றது. எஞ்சிய தமிழ் நூற்களையும் அவர் கற்றிருப்பாரென ஊகித் தறியலாமேயொழிய, உறுதியாய்ச் சொல்வதரிது. அவர் யாவரினும் பிற்பட்ட நூற்றாண்டில் பிறந்தவரானபடியால் அவர் தனக்கு முந்தியிருந்த நூற்களையெல்லாம் கற்றவரென்றே கொள்ளலாம். எனினும் தொன்மைநூற்களில் ஈடுபட்டவரென்று சொல்வதற்கிடமில்லை. ஏனெனில், அங்ஙனமாயின் அவர் தமிழர் முறையின்படி முன்னோர் பொருளை மட்டுமன்றி அவர் மொழியையும் பொன்னேபோற் போற்றியிருப்பார். அவ்வாறு போற்றியிருப்பின், முதுமொழியோர் சொற்பிரயோகத்தைக் கையாண்டிருப்பதுமன்றி, வடமொழியையும் இடர்படவெய்து யாவருக்கும் 'சஞ்சல சாலத்'தை யுண்டு பண்ணியுமிரார்.

முன்னோர் பொருளையும், மொழியையும் கையாள்வது நம் மிந்தியருக்கு இயல்பாய்விட்டது. ஆங்கிலேயர் நாட்டில், அவ்வாறு பொருள்களைக் கவர்ந்து தம்முடையதேபோல் புலவர்களெழுதப்புகுந்தால் அது மிகவும் ஏழ்மைத்தென எண்ணப்படுகின்றது. ஒருவன் தன் புலமையைக் காட்டவேண்டின், அவன் தன்னியல்பால் தனக்குத் தோன்றியவற்றை நயம்பட வுரைத்துக் கவின்பெறப் புனைந்து அணிபெற வமைத்துச் சொல்லவேண்டுமேயொழியக் கரவொழுக்கத்தால் பிறர்பெற்றியைத் தன்னதாக்கி எடுத்துரைத்தல் கூடாதெனக் கண்டிக்கப் படுகின்றது. அவ்வாறு ஒரு புலவர் கூறிய உவமையையே மற்றொருவர் எடுத்துக்கூறின், அப்புலவருக்குப் புனைந்துரைக்கும் வல்லமை இலதாக எண்ணி அவரைப் பீடிலாப் புலவரெனக் குறைவாய் எண்ணுவர். இவ்வகையான கோட்பாடு நம் தமிழுலகில் இருந்திருக்குமேல், சில பாவலர் கூறியவுவமைகளையே மற்றவர் கையாளாமல் இப்போது தமிழில் வழிவழியாய் வந்துள்ள வாய்ப்பாடான சில உவமைகள் இல்லாமல், தமிழ்மொழி புதிது புதிதான உவமைகளை அடைந்து சிறப்பெய்தியிருக்கும் உதாரணமாகத் தமிழில் தாமரையானது முகம், கண், வாய், கை, காலடி முதலிய பல உறுப்புக்களுக்கும் உவமையாக எடுத்துச்சொல்லப்படுகின்றது. இதைப் புலவர்கள் பலரும் பலவகையான சொற்களால் தெரிவிக்கின்றார்களேயொழிய கூறும் உவமைமட்டும் ஒன்றே. அதேபோல், ஓர் மங்கையை

வருணிக்குமிடத்தும், முகம் தாமரைக்கும், நெற்றி பிறைச்சந்திரனுக்கும், கண் கயல்மீனிற்கும் குவளை மலர்க்கும், மருண்ட பார்வையை நவ்வியின் பார்வைக்கும், மூக்கு எள்ளின் மலருக்கும், தோள் மூங்கிலுக்கும், கைகள் காந்தளுக்கும், கால் கதலித்தண்டிற்கும், ஒப்பிடப்பட்டிருப்பதை எல்லா நூல்களிலும் காண்கின்றோம். இது, படிப்போர்க்கு ஒருவித வெறுப்பை உண்டு பண்ணுகின்றது. நமது வில்லிபுத்தூராரும் இந்தவிஷயத்தில் தவறிழைத்தவர்தான். ஆனால் தவறு அவருடையதன்று. அக்காலத்து வழக்கத்தின் தவறேயொழிய இது வேறில்லை. வேறுபடக் கூறியிருந்தால், பிற புலவர்கள் அவர்மேல் குற்றஞ்சாட்டி அவருடைய நூல் மேம்பாடடையாத வழிகளைத் தேடியிருப்பார்கள்.

நிற்க, வடமொழியைத் தமிழில் பெரிதும் கலந்தவர் இவரென்று கீழே சொன்னோம். வடமொழிக் கலப்புத் தமிழில் கூடாதென்று ஒரு சாரார் மிகவும் வற்புறுத்திக் கூறுகிறார்கள். ஆங்கிலத்திலும் இது போன்ற வழக்கொன்றுண்டு. ஆங்கிலமானது தானே முளைத்துத் தழைத்த தனிமொழியன்று. ஆங்கில நாட்டில் ஆரம்பத்தில் 'பிரிட்டன்ஸ்' என்னும் ஒரு வகுப்பார் இருந்தார்கள். பிறகு வடக்கேயிருந்து நார்ஸ்மென் என்று சொல்லப்பட்ட 'ஆங்கிலஸ்' 'சாக்ஸன்' என்ற இருவகைக் கூட்டத்தார் ஆங்கில நாட்டைக் கைப்பற்றித் தம்மொழிகளை அவ்வூரில் பரவச்செய்தார்கள். சீக்கிரத்தில் இம்மொழி அங்கே நிலைபெற்றுவிட்டது. இது இப்படியிருக்குங்காலத்தில், அதிராச் சிறப்பையுடைய லண்டன்மாநகர், கி. பி. 1066-ம் ஆண்டில் பிராஞ்சுக்காரரால் வெல்லப்பட்டு அவர்களால் ஏராளமாய்க் குடியேறப்பட்டது. இந்நாள் தொடங்கி ஆங்கிலம், பிராஞ்சு மொழியும் அம்மொழிக்குத் துணையான கிரீக் லாட்டின் முதலான பல மொழிகளும் விரவப்பெற்றுத் தன்னியல்புமாறி வேற்றுருவங் கொண்டுவிட்டது.

அச்சமயம் தங்கள் நாட்டிலும் தங்கள் மொழியிலும் பற்றுக்கோடுடைய சிலர், லாட்டின், கிரீக் முதலான பிறமொழிகளை ஆங்கிலத்தில் கலக்கவிடக் கூடாதென்றும், ஆங்கிலோசாக்ஸன் என்னும் சுத்தமான ஆங்கில மொழிகளிலேயே நூல்கள் எழுதப்பட வேண்டுமென்றும் வாதித்தார்கள். ஆனால் அந்த வாதம் சிறிது காலத்தில் நசித்துப்போய் விட்டது. தற்காலம் ஆங்கிலத்தில் மேற்கூறிய மொழிகள் மட்டுமன்றித் துலுக்கும், பூச்சி கட்டுமர மென்கிற சில தமிழ்மொழிகளும் கலந்துவிட்டன. அதனால் ஆங்கில மொழியின் பெருமை குறைந்து விடவில்லை. முன்னைவிடப் பதின்மடங்கு மேன்மையடைந்ததாய்ப் பூகோளத்தில் காணப்படுகின்ற ஒவ்வொரு நாட்டிலும் வழங்கப்பட்டு உயர்வடைந்து இருக்கிறது. ஆகையால் வளரும் மொழியை வேண்டாத கட்டுப்பாடுகளை ஏற்படுத்திக் குன்றச்செய்வது கூடாதென்று மற்றொரு சாரார் வாதிக்கிறார்கள். எனினும் ஆங்கிலத்திலும் சுத்த ஆங்கில மொழிகளையே உபயோகித்து எழுதப்படும் வியாசமும் பாவும் சிறந்தனவெனக் கொண்டாடப்படுகின்றன. ஆகையால் வில்லிபுத்தூரார் தமிழ் மொழியில் வடமொழியைப் பெரிதுங் கலந்து எழுதியதனால் தமிழுக்கு ஒருவித நன்மையே தவிர வேறில்லையென்று நம்மவரிற் பெரும்பாலார் எண்ணினபோதிலும், தமிழ் மொழிகள் மலிந்துகிடக்க, ஓரோ சமயத்தில் மிகவும் இன்றியமையாத வேளையில் வடமொழியைக் கையாள்வதைவிட்டு நூல் முழுவதும் ஒரே வடமொழியாய்ச் சிதறவடித்துத் தமிழின் நிலைகுலைய வெழுதுவது புலமையின்பாற்பட்டதன்று. வில்லிபுத்தூரார் வடமொழிச் சொற்களையும் சொற்றொடர்களையும் சேர்த்தெழுதியிருப்பதைப் பின்னால் உதாரண வாயிலாக விளக்குவோம். எனினும், பளிங்குக்கல்லால் சமைக்கவேண்டிய ஒரு பெரும் மாளிகையை, செங்கல்லாற் சமைத்தாராயினும், அதன் வானளாவும் இயற்கையும், வேலைப்பாடும் கண்டோர் மனதைக் கவர்கின்றன. ஆங்கிலத்தில் அரியதொரு காப்பியமான 'வீடு பேறிழந்தது', என்னும் நூல் மில்டன் என்னும் கவியால் எழுதப்பட்டுள்ளதை ஆங்கிலேயர்கள் அவ்வாறே, அது முழுவதும் 'லாடின்' கிரீக் மொழிகளால் யாக்கப்பட்டுள்ளது எனக் குறை கூறிக்கொண்டிருந்தார்கள். ஆனால் அதற்கு மாறுத்தரமாக அடிசன் எழுதிய வியாசங்களில், மில்டன் எடுத்துக்கொண்ட விஷயம் மனமொழிகளுக்கு எட்டாத உலகத்தின் தோற்றமும் தேவயுத்தம் முதலிய விஷயங்களடங்கியதுமானபடியாலும், அவருடைய எண்ணங்கள் வழக்கமான ஆங்கிலமொழிகளால் அளவிட்டுச் சொல்லமுடியாதனவாயிருந்தபடியாலும் அவர் வேறுமொழிகளைப் புகுத்தியது சாலவும் ஏற்புடைத்து என்று விரித்து விளக்கினர். ஆனால் அதுபோல் புதியதொரு விஷயத்தை எடுத்து வில்லிபுத்தூரார் எழுதவில்லை. முன்னரேயே எழுதப்பட்ட கதையையே சுருக்கமாக எழுதினர். அன்றியும் மில்டன் கவியைப்போன்று மகத்தான நடையிலும் சிறந்த அணிகளோடும் இவருடைய பாரதம் எழுதப்படாமையால், அவர் வடமொழிகளைச் செறியத்தொடுத்தது நேரிதன்று என்பது எமது கொள்கை.

இவருடைய மதம் யாதென்பதைப்பற்றிப் பெரியதொரு விவாதம் நடந்தேறி வருகிறது. இவர் மதத்தில் வைணவர் என்பதற்கு எள்ளளவும் ஐயமில்லை. பெரியாழ்வாரின் பெயராகிய வில்லிபுத்தூரார் என்னும் பெயரே இவருக்கு இடப்பட்டமையால் இவர் வைணவக் குடியிற் பிறந்தாரென்பது புலப்படுகின்றது. குடிப்பிறப்புமட்டு மன்றித் தன்னியல்பாலும் அவர் விண்டுவுக்குத் தொண்டுபூண்டவர் என்பது அவருடைய தற்சிறப்புப் பாயிரத்தாலும், ஒவ்வொரு சருக்கத்தின் தலைப்பிலும் உள்ள காப்புச்செய்யுட்களாலும் தெள்ளிதிற் புலப்படும். 'பாரதப் பெருமையும் பாரேன், மாதவன் சரிதமும் இடையிடை வழங்குமென்னு மாசையால் இது இயற்றத் துணிந்தேன்' என்று சொல்வது அவர் திருமாலிடத்திற் கொண்டிருந்த அன்பின் மிகுதியைப்புலப்படுத்துகின்றது. மாதவன் என்னும், வடமொழியைத் தென்மொழியாக்கி மாது அவன் என்றும், மன்னு மாதவன் என்னும் தொடர்மொழியை மன் உமாதவன் எனவும் பிரித்து, சிவனையே குறிப்பித்தார் என்று சிலர் விதண்டா வாதம் செய்வது ஏற்காது. "மூவருமாய், மூவருக்கு முதல்வனாய், யாவரும் யாவுமாகிப் பற்பல தேவரும் இறைஞ்சப்பெற்ற தேவருமாகி நின்ற செங்கண்மால் எங்கள் கோவே" என்று பல விடங்களில் காப்புச் செய்யுட்களால் அவர் விளங்கவைத் திருக்கின்றமையால் சைவரென்பது சில சைவமதத்தருடைய வீண்வாதந் தவிர வேறன்று. சிவாலயத்தைக் காணவுங்கூசித் திரையிட்டு மறைத்து வழிக்கொண்டார் என்று சொல்லும் கதையும் பொய்க்கதையே. அர்ச்சுனன் தீர்த்தயாத்திரைச் சருக்கம், அருச்சுனன் தவநிலைச் சருக்கும் முதலிய விடங்களில், சிவபெருமானைச் சிறப்பித்தும், சைவாகமங்களிற் சொல்லப்பட்ட மரபு வழுவாமலும் அம்மரபுக்கேற்ப மாலைத் தாழ்த்தியும், சிவனைப்பற்றித் தக்க மரியாதையுடனும் எழுதியிருத்தலாலும், நூலில் ஆங்காங்கே குமரக் கடவுளைச் சிறப்பித்தும், சிறந்த வீரச் செயல்களுக்கு அவர் செயல்களையும், இளமைக்கு அவர் உருவத்தையும் உவமித்துங்கூறியிருத்தலாலும், அவர் சிவத்துவேஷி அல்லர் என்பது வெளிப்படை. ஆகையால் அவர் தன் மதத்தில் பற்றுள்ளவராய்ப் பிறர்மதத்தைப் பழிக்காதவராய்ச் சமத்துவக் கொள்கையை யுடைய அறிவிற் சிறந்த பெரியராய் விளங்கியிருந்தார் என்பதற்கு ஐயமில்லை.

'குட்டுதற்கோ பிள்ளைப் பாண்டிய னீங்கில்லை குறும்பி யளவாக் காதைக்குடைந்துதோண்டி—யெட்டினமட் டறுப்பதற்கோ வில்லியில்லை' என்னும் தனிப்பாடற்றிட்டுச் செய்யுளினால், இவர் வாதத்தில் வென்றவரை இவ்வாறு நடத்திவந்தார் என்று சிலர் நம்புகிறார்கள். இதற்கு மேற்கூறிய செய்யுளைத்தவிரவேறு ஆதாரமில்லை. உயிர்களிடத் தன்மையும் தங்கள் தண்ணளியையுமே சிறந்த அணிகலமாகக் கொண்டொழுகிய அக்காலத்துப் பிராம்மணர் ஒருவர், காதைத் தன் துறட்டுக்கோலால் குடைந்தறுத்தார் என்பது நம்புவதற்கு இடந்தரவில்லை. சிறப்புப் பாயிரத்திலும் அவர் மைந்தர் 'தீரகாளம் பெறுதலின் யாரினும் சிறந்தோன்' என்றுகூறி, வெற்றிச் சின்னங்களைக் குறிப்பிட்டாரே யொழியத் துறட்டுக்கோலைப் பற்றிக் கூறவில்லை. இம்மாதிரியாகவே, இவரிடம் அருணகிரிநாதர் சொற்போர் பொருது வென்றார் என்பதும் கர்ணபரம்பரையில் கிடைத்த ஒரு கதையாகவே தோன்றுகிறது. செந்நாப் புலவர் ஒருவர் தன் கருத்துக்களைத் தகர வெழுத்தாலேயே சொல்லப் புகுந்தார் என்பதும், அதையும் ஆசுகவியாக நினைத்தவளவிலேயே பாடினார் என்பதும் கொள்ளத்தக்கனவாயில்லை. இது நிகழ்ந்ததாகச் சொல்லப்படுகின்ற திருவண்ணாமலையைப்பற்றி இவர் சொல்லும் போதும்

"பெற்றான் சகதண்டங் களனைத்தும் மவைபெற்று
முற்றாமுகிழ் முலையாளொடு முக்கண்ணர் விரும்பும்
பற்றாமென மிக்கோரிகழ் பற்றொன்றினு முண்மை
கற்றார்தொழு மருணாசல மன்போடு கைதொழுதான்"

என்று பொதுவுறக் கூறிப் போந்தாரே யொழிய, அருணகிரிநாதரைப் பற்றியாவது அத்தலத்தில் தனக்கு நிகழ்ந்ததைப் பற்றியாவது யாதொன்றும் அவர் கூறவில்லை. தன்தோல்வியைப்பற்றி அவர்கூறுவாரோவெனின், அவர் மனித இயற்கையராகவாதல், தெய்வ இயற்கையராகவாதல் இருந்தல்வேண்டும். முற்றுந்துறந்த முனிவர்க்குரிய குணங்களையுடையராக விருந்திருப்பின் அந்தத் தலத்தைப் புகழ்ந்தும் அங்குறையும் அருணகிரியாரை வியந்தும் கூறியிருப்பர். அன்றேல் அந்த விடத்தையும், அதில் வதியும் அருணகிரியாரையும் இகழ்ந்து கூறியிருப்பர். எவ்வாற்றாலும் தனக்கு நிகழ்ந்தவை தோன்றுமாறு தன்னையும் அறியாமல் சிலசொற்பிரயோகம் அச்செய்யுள்களில் நிகழ்ந்திருக்கும். கண்கூடாகக் கண்டவைகளையன்றி வேறொன்றையும் இவன் நம்பானாகலின் கடவுளும் இல்லையென மறப்பான் என்று பிறர் என்னை ஏளனஞ் செய்யினும் செய்க. இக்கதை எனக்கு உண்மையாகத் தோன்றவில்லை.

இவர் பாரதம் பாடியதற்கும் வெவ்வேறு காரணங்கள் சொல்லப்படுகின்றன. சிறப்புப் பாயிரத்தில், அரசன் வில்லிபுத்தூராரை நோக்கி 'நீரும் நானும் பிறந்த திசைக் கிசைநிற்பப் பாரதக் கதையைத் தமிழில் பாடும்' என்று கேட்டதனால் இது விருத்தப்பாவால் பாடப்பட்டது என்று கூறப்பட்டிருக்கிறது. அதுவே உண்மையாக விருந்திருக்கவேண்டும். வேறு கதைகளைப்பற்றி நாம் ஆராயவேண்டியதில்லை. என் முன்னுரையைமுடிக்குமுன், இவர் கம்பரைப்போல்தன்னை ஆதரித்த அரசனைப் புகழ்ந்து ஆங்காங்கே கூறியிருத்தலைக் குறிப்பிக்க வேண்டியவனாயிருக்கின்றேன். கம்பரைப்போல் இத்தனை செய்யுள்களுக் கொருமுறை புகழ்வதென வொரு நியமம் வைத்துக் கொள்ளாமல் அவருக்குத் தோன்றியபோது புகழ்ந்து கூறியிருக்கின்றார்.

"சொன்மழை பொழிந்து நாடொறுந் தனது
தோள்வலி துதிக்கும் நாவலர்க்குப்
பொன்மழை பொழியுங் கொங்கர்பூ பதிதன்
பொற்பதம் பொருந்தலர் போல"

என்று காண்டவ தகனச் சருக்கத்திலும்,

"கொடிமதிற் பாகை வேந்தன் கொங்கர்கோன் புரவிக்
வடதிசை யரசர் தங்கள் மாமணி மகுடம்போல [காலால்

விசயன் தன்னம்பினால் துரியோதனனை மகுடபங்கம் பண்ணினானென்று நிரைமீட்சிச் சருக்கத்திலும், அவர் கொடையைப் பதினாறாம் போர்ச்சருக்கம் 90-பாடலிலும், பதினேழாம் போர்ச்சருக்கம் 33-வது பாடலிலும் புகழ்ந்திருத்தல் அறியத்தக்கது.

இதுவரை பொதுவாகவும் குறிப்பாகவும் சில விஷயங்களைக் கூறினேன். இனிவரும் இதழ்களில் வில்லிபுத்தூரார் கவித்திறத்தையும், அவர் நூலிலுள்ள சிறப்புக்களையும் உவமை முதலியவைகளின் பொருத்தத்தையும் ஆராய்வோம்.

நமது சந்தா நேயர்கள் தமது சந்தா பணத்தை உடனே மணியார்டர் செய்து விடும்படி கேட்டுக்கொள்கின்றோம். இரண்டொரு வாரங்களுக்குள் அனுப்பாத பக்ஷத்தில் வி. பி. மூலம் நாங்கள் பெற்றுக் கொள்ளும்படி எதிர்பார்க்கின்றார்களென்று உணர்ந்து, மூன்றாவது வாரம் வி. பி. யில் அனுப்புவோம்.

மானேஜர்.

அப்பர்.

1. பிறப்பும் இளமையும்.

4. அப்பர் இளமையும் அவர் கல்வியும்

நமது தமிழ்நாடு பற்பல துன்பங்களால் வருந்துங் காலே மருணீக்கியார், இவ்வுலக மருளைநீக்கி யாவரையும் உய்விக்குமாறு திருவவதாரம் செய்தமை முன்னே கூறப்பட்டது. இவர் கல்வி கற்க ஆரம்பித்த பருவத்திலேயே தந்தை சிவபத மடைந்ததாயும், தாய் உடன்கட்டை யேறியதாயும் பெரிய புராணத்திற் காண்கிறோம் *. அங்ஙனம் பெற்றோரை யிழந்தும் இவர்கற்ற கல்விக்கு எல்லையில்லை. நான்கு வேதம் ஆறு சாத்திரம் அறுபத்திநான்கு கலைஞானங்களும் இவர் கசடறக் கற்றனரென்பதற்குப் பல அத்தாட்சிகள் அவர் பாடல்களிற் காணப்படுகின்றன. பயிரின் சம்பந்த கல்வி மாத்திரமன்று, கடலில் மரக்கலங்கள் ஒட்டும் இலக்கணம், காட்டில் யானைகளைப் பிடிக்கும் வகை, போர்க்களத்தில் யுத்தம் நடத்தும் திறமை, அரசதந்திரம் குடியியல்பு சட்டநிர்ணயங்கள் முதலியவற்றிக்கு அடிப்படையாயுள்ள எல்லாச் சாத்திரங்களும் கண்டறிந்தவராய் இளமையிலே விளங்கலானார் †. கல்விகற்றல் இவருக்கு மிகவும் எளிய காரியமாயிருந்தது. அக்காலத்தில் அவர் கல்வியும் ஆராய்ச்சியும் நமது ஆங்கிலேய தத்துவ சாஸ்திரிகளும் கண்டு வியக்கத் தக்கனவாய் விளங்குகின்றன.

27 பக்கத் தொடர்ச்சி

மருணீக்கியார் கல்வியோ, புத்தகக் கல்வியாய்க் காணப்படவில்லை. அண்ட சராசரங்களமைந்த இயற்கையே ஒரு நூலாய்க் கொண்டு கற்றகல்வி. ஆகாயத்திலே காணும் முகிலைப் பற்றியும் முகிலினிடைத் தோற்றும் மின்னலைப் பற்றியும், ‡ மழை பெய்யும் காட்சியைப் பற்றியும், அக்காலங்களில் மழையின் பெருக்கால் வெளிவந்து பறைகொட்டும் * தவளை முதலிய ஊர்வனவற்றைப் பற்றியும் அவர் உபயோகிக்கும் தொடர்மொழிகளைக் கவனிப்பின் பத்தொன்பது அல்லது இருபதாம் நூற்றாண்டில் இயற்கைத் தத்துவ (Scientific) ஆராய்ச்சியால் கண்டறிந்த உண்மைகள் இவருக்கு உள்ளங்கை நெல்லிக்கனியாய் விளங்கினவென நாம் அநுமானிக்கலாகும். இத்தகைய பேரறிவு அவர் இளமையில் பெற்றார் என்பதற்கும் சந்தேகமில்லை.

கலைஞானங்களில் மருணீக்கியார் ஏற்றம் சிற்சில இடங்களில் அவர் பாக்களிற் காணலாகும். இக்கலைகளில் விசேடமாய்க் காட்டக்கூடியவை மூன்று—சங்கீதம் ஓவியம் † சிற்பம் என்பன. இக்கலைகள் முதிர்ச்சியிலுள்ள § நுட்பங்களே உவமானங்களாயும் உருவகங்களாயும் சில பாசுரங்களில் அமைந்திருக்கின்றன. தேவாரப் பாக்கள் கலைஞானங்களை வெளியிடப் பாடியனவல்ல. தன்னையும் அறியாது, சில சொற்றொடர்கள் பக்திநெறியை விளக்குங்காலை அவர் வாக்கினின்று புறப்படுவதை நாம் பக்தியை மறந்து ஆராயுங்காலைக் கவியின் அந்தரங்கத்திலுள்ள கலைஞானவொளிவிளங்கும்.

சங்கீத ஞானத்தைக் காட்டும் பாடல்கள் ‡ குற்றமற்ற தமிழ்ப் பண்களாம். "மாதர் பிறைக்கண்ணியானை" முதலியன ஆரிய நடையிற் பாடப்படுகின்றவாயினும், தமிழ்ச்சொற்களைப்போல் தமிழ்ப்பண்களும் ஆரியத்திற்குப் புறம்பாய் நிற்கும். இவர்பாடிய சந்தவிருத்தங்கள் ஆரிய சந்தங்கள் போலிராமல் இலக்கண மாத்திரைகளுக்கு கட்டுப்பட்டனவாம்.

அப்பர் பாடிய இயற்கை வர்ணனை ஒவ்வொன்றும் ஓவியமே. இவர் கவிகள் யாவும் கலைஞான இரதம்

---

* ஆயநா ளிடையிப்பா லணங்களையா டனைப்பயந்த
தூயகுலப் புகழனார் தொன்றுதொடு நிலையாமை
மேயவினைப் பயத்தாலே யிவ்வுலகை விட்டகலத்
தீயவரும் பிணியுழந்து விண்ணுலகிற் சென்றடைந்தார்(27)
மற்றவர்தா முயிர்நீப்ப மனைவியார் மாதினியார்
சுற்றமுடன் மக்களையுந் துகளாக வேநீத்துப்
பெற்றிமையா லுடனென்றும் பிரியாத வுலகெய்துங்
கற்புநெறி வழுவாமற் கணவனா ருடன்கலந்தார் (28)
திருநாவுக்கரசு நாயனார் புராணம்.

† கற்றுக் கோள்வன வாயுள நாவுள
இட்டுக் கொள்வன பூவுள நீருள
கற்றைச் செஞ்சடை யானுள னாமுளோ
மெத்துக் கோநம னான்முனி வுண்பதே

‡ i மின்னானை மின்னிடைச்சே ருருமி னானை
வெண்முகிலா யெழுந்துமழை பொழிவான்றன்னைத்
தன்னானைத் தன்னொப்பா ரில்லா தானைத்
தாயாகிப் பல்லுயிர்க்கோர் தந்தை யாகி
என்னானை யெந்தை பெருமான் றன்னை
யிருநிலமு மண்டமுமாய்ச் செக்கர் வானே
அன்னானை யாவடுதண் டுறையுண் மேய
வரனடியே யடிநாயே னடைந்துய்ந் தேனே
—திருவாவடுதுறை-திருத்தாண்டகம் 2.

Vide Ruskin's Modern Painters Vol I. chap IV Region of the Rain clouds "the last fragments of rain clouds bearing white as they disappear
தந்தார் "வெண்முகிலாய்ப் பரந்தெங்கும் பெய்யுமாமழை"
—திருப்புன்கூர் 2.

ii 'வானகத்தில் வளர்முகிலை மதியம் தன்னை etc',
—திருமாற்பேறு-திருத்தாண்டகம்.

* பைங்காற் றவளை பறைகொட்டப் பாசிலை நீர்ப்படுக
ரைங்காற் குவளைமே லாவி யுயிர்ப்ப வருகுலவும்
செங்காற் குருகிவை சேருஞ் செறிகெடி லக்கரைத்தே
வெங்காற் குருசிலை வீர னருள்வைத்த வீரட்டமே
—திருவதிகை-திருவிருத்தம் 2,

† விரையாதே கேட்டியேல் வேற்க ணல்லாய்
விடுங்கலங்கள் நெடுங்கடலுள் நின்று தோன்றும்
திரைமோதக் கரையேறிச் சங்க மூரும்
திருவொற்றி யூரென்றார் தீய வாறே
—திருவொற்றியூர் - திருத்தாண்டகம்.

§ கோவண முடுத்த வாறும் கோளர வசைத்த வாறும்
தீவணச் சாம்பல் பூசித் திருவுரு விருந்த வாறும்
பூவணக் கிழவனாரைப் புலியுரி யரைய னாரை
ஏவணச் சிலையி னாரை யாவரே யெழுது வாரே
தனித்திருநேரிசை—

Vide "Modern Painters" Vol 2. chap. XIV

‡ மாசில் வீணையும் மாலை மதியமும்
வீசு தென்றலும் வீங்கிள வேனிலும்
மூசு வண்டறை பொய்கையும் போன்றதே
ஈச னெந்தை யிணைபடி நீழலே"
—தனித் திருக்குறுந்தொகை—

ப் பெற்றனவாம். இவர் கவித்திறமையும் திறமையும் ஒருங்கே வளர்ந்த வென்பதற்கு ில்லை.

. அப்பர் இளமையிற் பாடிய பதிகங்கள்.

நாவுக்கரசு நாயனார் பாடிய பதிகங்களில் ற் பாடியதென்று எண்ணப்பட்ட "கூற்று று விலக்ககிலீர்" என்னும் திருப்பதிகத்திலே ாசுரத்தில் "ஜலம் பூவொடு தூபமறந்தறியேன், ா டிசைபாட மறந்தறியேன்" என்பதை நோக்கு ு இவர் பதிகம் பாடுவதற்குமுன், பற்பல மைந்த பதிகங்கள் பாடியிருக்கலாமென்றே ண்ணவேண்டும். கலைகள் பயின்றகாலை, கவியும் ற்றிருக்கலாம் என்பதற்கு அவர் பதிகங்களின் கள் ஒரே தன்மையனவாயிராமையே ஒரு அத் .

நாவுக்கரசரின் தேவாரப் பதிகங்களை மூன்று க்களாய்ப் பிரித்துக் காட்டலாகும். அவற்றில் 10-ம் பாசுரம் (அதாவது பதிகமுடிவு) திருக் பத்தில் இராவணன் கர்வபங்கமான விடயம் ப் பெற்றது †. இரண்டாம் வகுப்பு, "மாலொடு கனும் தேடித் தேடொணாத் தேவன்" ாருள் என்று குறிப்பிட்டுள்ள பதிகங்கள். ம் வகுப்பு, மேற்கண்ட இருவிஷயங்களில் ஒன் மையாது பாடப்பட்டும், மொத்த சங்கையில் ின்றி 10, அல்லது அதிகப்பட்ட பாசுரங்கள் ப் பெற்றதாம். இம்மூன்றும் வகுப்பில் காட் டிய பதிகங்களே அப்பர் இளமையிற் பாடிய ா என்று உறுதிப்படுத்த பல ஆதரவுகள் உள. வையாவன:—

சமயக் கண்டனையின்மை. தான் சமண மதக் ல் விழுந்த விஷயம் காணாமை.

லக அநுபவ முதிர்ச்சி தோற்றாமை. சுருதி, அனுபவம் என்னும் மூன்றில், இப்பதிகங்க நதி, யுக்திகளேபெரும்பான்மையும் புலப்படும். கல்வித்திறமையை வெளிப்படையாய்க்காட்டல். போதிப்பேனென்றும், தன்னொழுக்கம் இன்ன வம் காட்டுதல்.

குற்றங்களை வெளியிடுவதும் நியாயத்திற்குப் ந்துமாயினும், இவை சிறவயதின் ‡ செய்கை ாம்.

ஒரு ஸ்தலத்தைப் பாடும்போது, பல ஸ்தலங் ஏற்றத்தைப் பற்றிய பாக்கள் இடையே கலத்)த்தகைய பாக்கள் "மற்றொன்று விரித்தல்" ம் குற்றம் பெறுவிடினும், அப்பர் முதிர்ந்த பாடிய பாக்கள்போல் ஒரே தன்மையான அவ ட்டுப் பெறவில்லை.

5 நடை, அணி, சந்தம், சொற்சித்திரம் இவைகளில் ஊக்கம். மேற்கண்ட முதலிரண்டு வகுப்புக்களிலடங்கும் பதிகங்கள் அளவற்ற ஆழமுடையனவா யிருந்தும், வெண்தமிழ் நடையாய் * யாவருக்கும் இனிது விளங்கும். இப்பதிகங்களோ திருஞானசம்பந்தர் பதிகங்கள்போல் சற்றுக் கடினமான செந்தமிழ்நடையில் விளங்குவதுடன், ஆங்காங்கு அணிகள் நெருங்கியும் நேரிசையாயிராமல் சந்தப்பண்களால் ஆக்கப்படனவாம்.

6. ஒவ்வொரு அடியின் முடிவு பெரும்பாலும், ஒரு வாக்கியமுடிவாதல். அல்லது ஒருஅடியின் ஈற்றுமொழி பின்னடியின் முதலிலுள்ள சொற்றொடரோடு பாய்ந்து கலவாமை. †

7. பல சமய ஆராய்ச்சியும், யோக ஞான $ சம்பந்தமான விசாரணைகளில் புகுதலும் இப்பாக்களில் பெரும் பான்மையும் இன்மை.

திருநாவுக்கரசு நாயனார் பாடிய மூன்று திருமுறைகளில் முதல் திருமுறையிலுள்ள 114 பதிகங்களில்‡ பன்னிரண்டும், 102பதிகங்கள் அமைந்த இரண்டாம் திருமுறையில் ஆறு பதிகங்களும், 99 பதிகங்களுடைய மூன்றும் திருமுறையில் பதிகங்கள் ஒன்பதும், இத்தகையவாய்க் காணப்படுகின்றன. அவையாவன:—முதல் திருமுறையில், 3-ம் பதிகமாகிய திருவையாறு - பண் காந்தாரம், 8 ம் பதிகமாகிய "சிவனெனுமோசை", 11-ம் பதிகமாகிய நமச்சிவாயப்பதிகம், 12-ம் பதிகமாகிய திருப்பழனம் - பண்-தக்கராகம், 21-ம்பதிகமாகிய திருவாரூர் திருவாதிரைத்திருப்பதிகம், 24-ம் பதிகமாகிய திருவதிகை-கொப்புளித்த திருநேரிசை, 44-ம் பதிகமாகிய திருவேகம்பம் - திருநேரிசை 53-ம் பதிகமாகிய "குழல்வலங்கொண்ட சொல்லாள்" என்னும் முதற் பாசுரம்பெற்ற திருவாரூர் - திருநேரிசை, 76 ம் பதிகமாகிய தனித்திருநேரிசை, 89-ம் பதிகமாகிய திரு நெய்த்தானம் - திருவிருத்தம், 92-ம் பதிகமாகிய திருவையாறு - திருவிருத்தம், 113-ம் பதிகமாகிய தனித் திருவிருத்தம், ஆகப்பன்னிரண்டு பதிகங்கள். இரண்டாம் திருமுறையிலுள்ள பதிகங்கள் யாவையெனில்:—

7-ம் பதிகமாகிய திருவாரூர்-திருக்குறுந்தொகை
54 ம் பதிகமாகிய திருவதிகை-திருக்குறுந்தொகை

ந்தனாய்ப் பணிந்தடியேன் தன்னைப் பன்னாள்
மாலை பாடப்பயில்வித் தானை.
திருமுதுகுன்றம்—திருத்தாண்டகம். 3.

த்தன்மையனாய விராவணனுக்
கருள்கருணைத் திறமானவதன்
மய்த்தன்மையறிந்து துதிப்பதுவே
மேல்கொண்டு வணங்கினர் மெய்யுறவே
—சேக்கிழார்

ஞான சம்பந்தர் பாடிய எட்டாம் பாசுரங்களையும்
க.
ஞானசம்பந்தர் திருக்கோடிகாப்பதிகத்தைநோக்குக.

இப்பாவின் நடையை நோக்குக.

* பன்னியசெந் தமிழறியேன் கவியேலமாட்டேன்
எண்ணிநொடு பண்ணிறைந்த கலைகளாய
தன்னையுந்தன் றிறத்தறியாப் பொறியி லேனைத்
தன்திறமு மறிவித்து நெறியுங் காட்டி
அன்னையையும் அத்தனையும் போல வன்பாய்
அடைந்தேனைத் தொடர்ந்தென்னை யாளக் கொண்ட
தென்னெறும்பி யூர்மலைமேன் மாணிக் கத்தைச்
செழுஞ்சுடரைச் சென்றடையப் பெற்றே னானே
—திருவெறும்பியூர் — திருத்தாண்டகம்.

† ஆங்கிலத்தில் Shakespeare முதலிய நூலாசிரியர் நாடகங்களில் முன்னவையெவை பின்னவை எவை என்பதற்கு இது முக்கிய பரிசோதனையாம்.

$ "ஞானத்தாற் றொழுவார் சில ஞானிகள், ஞானத்தாற்றொழுவேனுனை நானலேன். ஞானத்தாற் றொழுவார்கடொழக்கண்டு, ஞானத்தாலுனை நானும் தொழுவனே
—தனிக்குறுந்தொகை—

‡ பதிகம்என்பது பெரும்பாலும் பத்துப்பாசுரங்கள் அமையப்பெற்றது.

89-ம் பதிகமாகிய தனித்திருக்குறுந்தொகை("ஒன்று வெண்பிறை" என்னும் முதற் பாசுர மமைந்தது)
90-ம் பதிகமாகிய தனித்திருக்குறுந்தொகை ("மாசில் வீணையும் மாலை மதியமும்" என்னும் முதற் பாசுர மமைந்தது)
93-ம் பதிகமாகிய "மறக்கிற்பனே" யென்னும் திருக் குறுந்தொகை.
96-ம் பதிகமாகிய மனத்தொகை-திருக்குறுந்தொகை

மூன்ரும் திருமுறையிலுள்ள பதிகங்கள் பின்வருமாறு.

2-ம் பதிகமாகிய கோயில் புக்க திருத்தாண்டகம்,
7-ம் பதிகமாகிய திருவீரட்டானம்-காப்புத் திருத்தாண்டகம்,
8-ம் பதிகமாகிய திருக்காளத்தி திருத்தாண்டகம்,
9-ம் பதிகமாகிய திரு ஆமாத்தூர்-திருத்தாண்டகம்,
13-ம் பதிகமாகிய திருப்புறம்பயம்-திருத்தாண்டகம்,
24-25-ம் பதிகங்களாகிய திருவாரூர்-திருத்தாண்டகங்கள்,
93-ம் பதிகமாகிய-பல்வகைத் திருத்தாண்டகம்
94-ம் பதிகமாகிய-தனித்திருத் தாண்டகம்,

ஆகத் திருநாவுக்கரசு நாயனர் இளமையிற் பாடிய பதிகங்கள் இருபத்தாறு*

* இப்பதிகங்கள் இளமையில் அப்பர் பாடியதென நாம் கொள்ளும் அனுமானத்திற்கும் கர்ணபரம்பரையாய் வந்த அப்பர் சரிதையைச் சேக்கிழார் எழுதிய சிற்சில விடயங்களுக்கும் முரண்நேர்கின்றது. அவற்றைப் பின்வரும் அத்தியாயத்தில் ஆராய்வோமாதலால் அப்பர் யௌவன பருவச் சரிதையை மாத்திரம் ஈண்டுக் காண்போம்.

தமிழ்ப் பாடம் 55.

[நளவெண்பா.]

கலிநீங்கு காண்டம்.

காயுங் கடக்களிற்ருய் கார்க்கோ டகனென்பேர்
நீயிங்கு வந்த தியானினைந்து—காயத்தை
மாருக்கிக் கொண்டு மறைந்துறைதல் காரணமா
வேருக்கிற் றென்ருன் விரைந்து 12.

பொழிப்புரை:— "கோபம்பொருந்திய மதயானைகளையுடைய அரசனே, கார்க்கோடகன் என்பது என்னுடைய பெயர். நீ இங்கு வந்திருப்பதை நான் நினைத்து, நீ உன்னுடைய சரீரத்தை மாற்றிக்கொண்டு ஒருவருக்கும் தெரியாமல் வசிக்கும்பொருட்டு நான் (இவ்விதம் உன்னைக் கடித்து) உருவத்தை வேருக ஆக்குவது ஆயிற்று" என்று விரைந்து கூறினன்.

கூனிருல் பாயக் குவளை தவளைவாய்த்
தேனிருல் பாயுந் திருநாடா—கானில்
தணியாத வெங்கனலைத் தாங்கினை யிந்த
அணியாடை கொள்கென்ரு ணங்கு. 13.

பதப்பிரிவு:—கூன் இருல் பாய குவளை தவளை வாய் தேன் இருல் பாயும் திரு நாடா, கானில் தணியாத வெம் கனலை தாங்கினய் இந்த அணி ஆடை கொள்க என்ருன் ஆங்கு.

பதவுரை

கூன் - வளைந்திருக்கின்ற
இருல் - இருல் மீன்கள்
குவளை - குவளையில்
பாய - பாய்வதினல்
தவளை - தவளையினது
வாய் - வாயில்
தேன் - தேனனது
இருல் - தேன்கூண்டிலிருந்து பாய்வதுபோல்
பாயும் - பாய்கின்ற
திரு - அழகிய வளப்பம் பொருந்திய
நாடா - நாடனகிய நளனே,
கானில் - காட்டில்
தணியாத - ஆருத
வெம் - கொடிய
கனலை - நெருப்பை
தாங்கினய் - நீ (என்பொருட்டு) பொறுத்தாய். அதற்குமாருக
இந்த - இந்த
அணி - அழகிய
ஆடை - வஸ்திரத்தை
கொள்க - பெற்றுக்கொள்"
என்ருன் - என்று கூறினன். (ஆங்கு - அசை)

விரிவுரை:—தேனிற்கு ஆசைப்பட்ட தவளை, பூவினின்று குடிக்க வகையறியாமல் குவளைக்கு அயலில் வாயைப்பிளந்துகொண்டிருக்க, அப்பொழுது இருல் மீன் அக்குவளைக்குள் குதிக்கவும் அம்மலர் சாயவே அதனுள்ளிருந்த தேன் சரிந்து, கூண்டிலிருந்து பாய்வதைப்போலத் தாரையாய் அத்தவளையின் வாய்க்குள் விழுந்துவிடுகின்ற தென்பது, இச்செய்யுளில் அடங்கிய இயற்கையின் சிறு நாடகமொன்று. இப்படிச்சொல்லி நளனை அழைப்பதில் உள்ளுறை உவமையொன்று அடங்கி யிருக்கின்றதோவென்று எண்ணும்படி இருக்கின்றது. கிடைக்கக் கூடாத தேன், அங்காந்திருந்த தவளையின் வாயில் குவளையிலிருந்து எவ்வாறு இருல்மீன் ஏறுவதால் பாய்ந்ததோ அவ்விதமே,நளனுடைய செல்வம் கலியின் செய்கையால் புட்கரனைச் சேரலாயிற்று.

சாதி மணித்துகிளீ சாத்தினற் றண்கழுநீர்ப்
போதின்கீழ் மேயும் புதுவரால்—தாதின்
துளிக்குநா டீட்டுந் துறைநாடர் கோவே
ஒளிக்குநா ணீங்கு முரு. 14.

கருத்து :—" உனக்கு இந்த உரு நீங்கிப் பழைய உருவம் எப்பொழுது வரவேண்டும் என்று தோன்றுகின்றதோ, அப்பொழுது இவ்வஸ்திரத்தைப் போர்த்துக் கொள்வாயானல், அப்பழைய உருவம் வந்துவிடும்" என்று கார்க்கோடகன் நளனுக்குச் சொன்னனென்பது இச்செய்யுளின் கருத்து.

வாகு குறைந்தமையால் வாகுகனென் றன்னமம்
ஆக வயோத்தி நகரடைந்து—மாகனகத் [தால்
தேர்த்தொழிற்கு மிக்கானீ யாகென்ருன் செம்மனத்
பார்த்தொழிற்கு மிக்கானைப் பார்த்து. 15.

கருத்து:—"வாகு (தோள்கள்) குறைந்த காரணத்தால் நீ வாகுகன் என்ற பேர் வைத்துக்கொண்டு, அயோத்திமா நகரம் அடைந்து அங்குத் தேர்த்தொழிலில் சிறந்த சாரதியாகி இரு" என்று கார்க்கோடகன் நளனுக்குக் கூறினன்.

விரிவுரை:—ஆகையால், செய்ந்நன்றிக்கு மாருகத் தீங்கு செய்யவேண்டும் என்று கார்க்கோடகன் நளனைக் கடிக்கவில்லை. எழுலகும் நின்ற கவிகை நிழல் வேந்தனயிருந்த இந்நளன் வறுமையுற்று நாடு நாடாய்த் திரிகின்றபோது தன்னைப் பிறர் பார்க்குந்தோறும் அவமானத்தால் அவனுடல் கூசிக்கூசி மனம் பதைக்கும். இந்தத் துன்பத்திலிருந்து அவனைக் காக்கும் பொருட்டே கார்க்கோடகன், அவனடையாளந் தெரியாதபடி உருவத்தை மாற்றி உதவி செய்தான். எனவே, கடித்தபோது தீங்கு செய்ததுபோல் தோன்றினலும் உண்மையிலே கார்க்கோடகன் கருத்து நளனுக்கு உதவி செய்வதாகவே இருந்தது. பெரும்பாலும் இவ்வுலகத்தில் பிறர் நமக்குத் தீங்கே செய்ய நினைத்தார்கள் என்று அவர் காரியத்தின் வெளித் தோற்றத்தைக்கொண்டு அவசரப்பட்டு மதித்து விடுகின்ரேம். மதித்துத் தீங்குபோல் தோன்றுகின்ற அந்நன்மையின் பயனை அடையாமல் கெடுத்துக்கொள்வது சாதாரண ஜனங்களின் தொழில். "என்னைக் கடித்தாயா, ஏ நன்றி கெட்ட பாம்பே" என்று நளன் அதனைக் கொன்றுபோட்டிருப்பானயின் அவன் கதி என்னவாயிருக்கும். மறுபடி இவ்வுருவத்தை முன்போல் அடையக்கூடிய வஸ்திரத்தைப் பாம்பினிடத்திலிருந்து பெருமல் எந்நாளும் வாகுகனகவே கிடக்க வேண்டியதுதான். பிறர் தனக்குத் தீமை செய்தார்கள் அல்லது செய்வார்கள் என்று எண்ணுவது பேதைமை மாத்திரமல்லாது, அடிமைப் புத்தி என்பதும் அது தான். நளன் மகா உத்தமனதலால் அவ்வாறு எண்ணுதது அவன் இயற்கையாயிற்று. "சிற்றம் ஒன்று இன்றிச் சினஎயிற்ருல் என் உருவத்தை மாற்றுதற்கு என் காரணம்" எனத் தக்க காரணம் இருக்கவேண்டும் என்னும் நிச்சயத்தோடு மிகவுஞ் சாந்தமாய்க் கேட்பதை மறப்பதருமை.

நன்மை செய்யவேண்டும் என்னும் கருத்தோடு தீங்குபோல் தோன்றுகின்ற ஒரு காரியத்தைச் செய்ததற்கு உதாரணம் இக்கார்க்கோடகன் செயல். ஆனல் நமக்குத் தீமையே செய்யவேண்டும் என்னும் உத்தேசத்தோடேயே பிறர் புரிகின்ற செயல்களும் சில உள. இவைகளுங்கூட, வெளிப்பார்வைக்கும் தக்றுவ ஆராய்ச்சியில்லாத மனதிற்குமாத்திரமே தீங்குபோல் தோன்றுவன ஆகும். ஆழ்ந்து கருதி அனுபவத்தையும் சேர்த்து ஆராய்ந்தால் இத் தீமைகளாகக் கருதிச் செய்யப்படுகின்றவைகள்கூட அந்தத்தில் நன்மையே யாவது சிறிது பயிற்சியால் தென்படலாகும். முன்னுதாரணத்தில், செய்பவன் நன்மையென்று கருதிச் செய்ய, அதைச் செய்யப்படுபவன் தீங்கு என்று எண்ணலாகின்ருன். ஆதலால் அது, ஒருவனுக்கு நன்மையென்று தெரிந்திருக்க மற்றவனுக்குத் தீங்குபோல் தோன்றுகிறது. எனவே, அதன் நன்மை, செய்பவனுக்குத் தெரியும், செய்யப்படுபவனுக்குத் தெரியாது. இனி, தீங்கே செய்யவேண்டும் என்று எண்ணி ஒருவன் செய்யும்போது அக்காரியத்தின் நன்மை, செய்பவன் செய்யப்படுவென் இருவருக்குந் தெரியாது. இவ்விருவர் அறிவிற்கும் மேலான ஒரு அறிவிற்கே தெரியும். இதுதான் இவ்விரண்டுவகைச் செயல்களுக்கும் உள்ள வித்தியாசம். 'நளவெண்பா' கவிபழகில் மாத்திரமல்லாது கருத்தின் பெருமையிலும் குறைந்ததன்று. நளன்தமயந்தி போன்ற நல்லார்களின் குணங்களை உரைப்பதும் கேட்பதும் மிக நன்று.

இணையாரு மில்லா னிழைத்த வுதவி
புணையாகச் சூழ்கானிற் போனன்—பணையாகத்
திண்ணக மோரெட்டுந் தாங்குந் திசையனைத்தும்
எண்ணாக வேந்த னெழுந்து.

பதப்பிரிவு:—இணை யாரும் இல்லான் இழைத்த உதவி புணை ஆக சூழ் கானில் போனன் பணை ஆகம் திண் நாகம் ஓர் எட்டும் தாங்கும் திசை அனைத்தும் எண் ஆக வேந்தன் எழுந்து.

அன்வயம்:—வேந்தன், இணையாரும் இல்லான் இழைத்த உதவி புணையாக, பணை ஆகத் திண்நாகம் ஓர் எட்டும் தாங்கும் திசை அனைத்தும், எண் ஆக எழுந்து சூழ் கானில் போனன்.

பதவுரை.

வேந்தன் - நளவேந்தன்,
இணை - தனக்குச் சமானம்
யாரும் - ஒருவரும்
இல்லான் - இல்லாதவனகிய கார்க்கோடகன்
இழைத்த - செய்த
உதிவி - உதவி
புணை ஆக - தனக்குந்துணையாக,
பணை - பருத்த
ஆகம் - உடலின்
திண் - வலிமையையுடைய
நாகம் - யானைகள்
ஓர்எட்டும் - எட்டும்
தாங்கும் - சுமக்கும்
திசை அனைத்தும் - திக்குக்களிலெல்லாம் இவனுருவத்தைக் கண்டவர் பரிகசிப்பதால்
எண் ஆக - எளிமை அடையும்படி,
எழுந்நு - எழுந்து
சூழ் - சூழ்ந்த
கானில் - காட்டில்
போனன் - போனன்.

இலக்கணம்

ஒலியினது அணுக்கள்சேர்ந்தால் எழுத்து ஆகும். எழுத்துக்கள் சேர்ந்தால் சொல்லாகும். சொற்கள் தொடர்ந்தால் வாக்கியமாகும். வாக்கியங்கள்சேர்ந்து ஒரு விஷயத்தைப்பற்றிக் கூறுவது கட்டுரை. கி என்பது ஒரு எழுத்து. கிளி என்பது கி ளி என்ற இரண்டு எழுத்துக்கள் சேர்ந்து ஆன ஒரு சொல். கிளி கூவியது, என்பது கிளி கூவியதுஎன்ற இரண்டு சொற்கள் சேர்ந்து ஆன ஒருவாக்கியம். "கிளி பச்சை நிறமான ஒரு பறவை. அது மரத்தில் வசித்துக் கனிகளைத் தின்று வாழும். அதன் குரல் செவிக்கு இனிமையானது. கிளியின்பேச்சை மாதர்களது மழலைக்குக் கவிகள் உவமையாய்க் கூறுவர்"...என்னும் இதுபோன்ற பலவாக்கியங்கள் சேர்ந்து ஆவது கட்டுரை.

ஆனல், எழுத்துக்களெல்லாம், ஒலியால் ஆகின்றன என்றாலும் ஒலியெல்லாம் எழுத்தாகா. அப்படியே, எழுத்துக்கள் சேர்ந்து சொல்ஆகின்றன என்றபோதிலும்,எப்படி எழுத்துக்கள்சேர்ந்தாலும் அவை

சொல்லொன்று ஆகத்தான்வேண்டும் என்னும் நியதியில்லை. சொற்கள் தொடர்ந்து வாக்கியங்கள் ஆகின்றன என்றதினலேயே, சொற்கள் எப்படித்தொடர்ந்தாலும் அவை வாக்கியமாய்விடும் என்றும் எண்ணப்படாது. வாக்கியங்கள் பல சேர்வது மாத்திரம் கட்டுரை ஆவதற்குப் போதாது. எனின், இவை இவை எப்படி இருக்கவேண்டுமென்று பார்ப்போம்.

எழுத்து.

ஒலியால் ஆவது எழுத்து. அ ஆ இ ஈ போன்றவைகளும், க் ங் ச் ஞ் போன்றவைகளும் க கா கி கீ, ச சா சி சீ போன்றவைகளும் எழுத்துக்கள். இப்படி எழுத்துக்கள் என்று சொல்லத்தக்கவை எவை? அ என்னும் சப்தம், ச் என்னும் சப்தம், சு என்னும் சப்தம் எழுத்துக்கள். இதுபோன்றே பிற சப்தங்கள் அல்லது ஒலிகளே நாம் அறிந்தவாறு மற்ற எழுத்துக்களும் ஆகின்றன. அ ச் சு என்னும் இம் மூன்று ஒலிகளுஞ் சேர்ந்தால் அச்சு, என்ற அர்த்தத்தைத் தரக்கூடிய வொரு சொல் ஆகும். இப்படிச் சொற்கள் ஆகக்கூடியனவாயிருக்கின்ற ஒலிகளையே எழுத்தென்று சொல்லவேண்டும். தும்மல் இருமல் கைபோடு கைதட்டல் இவைகளெல்லாம் ஒலிகளே ஆனபோதிலும் அந்த ஒலிகளைச்சேர்த்து அர்த்தம் தரக்கூடிய வார்த்தை ஒன்றும் உண்டாக்க முடியாதாகையால் இவைகளும் இவைபோன்ற பிற ஒலிகளும் எழுத்துக்கள் ஆகா. ஆகையால், மொழி அல்லது சொல் உண்டாவதற்கு முதற் காரணமாய் எந்த எந்த ஒலிகள் இருக்கின்றனவோ அவ்வொலிகளே எழுத்து என்பதற்கு உரியதாகும். இந்த எழுத்துக்கு உரியதாயிருக்கின்ற ஒலி பாஷைக்குப்பாஷை வேறுபடும். ழ் என்கின்ற ஒலி 'மூழ்கு' என்ற சொல்லிற்குக் காரணமாயிருப்பதால் இதைத் தமிழ்ப் பாஷைக்குரிய வொரு எழுத்தென்போம். ஆங்கிலத்தில் ழ் அல்லது ழ ழா வரிசையிலுள்ள சப்தத்தோடு சேர்ந்த வார்த்தைகளே இல்லை. ஆகையால் இந்த ழ் வரிசை ஒலி ஆங்கில பாஷையில் எழுத்தாகாது, தமிழ்ப்பாஷையில் ஆகும். அவ்விதமே f என்ற ஒலி fat, calf என்பனபோன்ற அர்த்தத்தைத் தருகின்ற ஆங்கிலமொழிகளுக்குக் காரணமாயிருப்பதால் அது அப்பாஷையின் எழுத்தாகும்; தமிழிலே இந்த ஒலி சேர்ந்த வார்த்தைகள் இல்லையாகையால், f என்றஒலி தமிழில் எழுத்தென்று வராது.

கம்ப ராமாயணம்.

பாலகாண்டம்

10. மிதிலைக் காட்சிப் படலம்.

காதலா லிராகவன் கார்முக மிறுத்தனன்.

கல்லும் புல்லுங் கரைந்துருகப் பொன்னேருழும் பூவினெதுங்கியும், சதகோடி மின்சேவிக்கும் மின்னரசென்னும்படி நின்றுந் திகழ்கின்ற சீதாபிராட்டி, "எங்கள் நாயகற்கு இனி யாவதாங் கொலோ" என்று ஊக்கம் மிகுந்த உவகையோடு கம்பர் காதலர் காட்சியை நிகழ்த்தப் புகுவாராகின்றனர். தென்சொற்கவியின் தீஞ்சுவையின்பம் இராமனையே இரமிக்கச்செய்யுமென்பது யாவரும் அறிந்ததோர் இயற்கையாதலால் அதனை அறியாது நம் கலையரசுகம்பர் வியந்தனர் என்று எண்ணுமை வேண்டப்படும்.

25 பக்கத் தொடர்ச்சி

தென்சொற் கவியின்பம் என்று கொண்டாடியதற்கேற்ப, செல்வம் குலம் கல்வி வயது ஆதியநலங்களால் மாத்திரமல்லாது ஓவியத்து எழுதவொண்ணு வுருவத்தாலும் பொருத்தமுடைய கோசலக்குரிசிலுடன் அவளைத் திருமணஞ்செய்விக்க மகிழ்ந்துவிரைகின்ற கம்பநாடுடையவள்ளல், வடநூல் முனிவர் வான்மீகிக்கு வெகுதூரம் விரைந்து முன்நடக்க வேண்டி நேர்கின்றது. வடமொழி முதனூலின்படி இராமபிரானுஞ் சீதாபிராட்டியு மீண்டுக் காட்சிகொண்டிலர், இவர்க்கிடையே காதலும் உதித்திலது. தாடகை உரத்தைக் கல்லித் தவசிகள் வேள்வி காத்து அகலிகை சாபம் நீக்கி அழைத்துடன் வந்த வந்தக் குமாரைக் கோசிகன் நேரே ஜனகமன்னனது முன்னர்க் கொண்டுபோய்த், "தயரதர் புதல்வ ரிவர். உன்வயினுள்ள வில்லைப் பார்த்திட விரும்புகின்றார்" என அவ்வேந்தன் வில்லின் வரலாற்றையும் அதனை வளைப்பவர்க்குத் தன்னெருமகள் மணாட்டியாவதுங் கூறித் தனுவைக் கொணர்விக்க இராமன் இறுத்துப் பின் சில மாதஞ் சென்றபின்னரே வைதேகியை முதன்முதல் மணமண்டபத்தில் கண்ணுற்றான் என்பது வான்மீகி வழிவந்த கதையாம். இது சிலம்பவித்தை செய்தானெருவன் பரிசில் பெற்றுப் போகின்றவொரு செய்திபோல் தோன்றுகின்றதே யல்லாது காதலர் இருவர் கடிமணம் புரிந்ததாகத் தோன்றவில்லை. இன்னபடி நிகழ்கின்ற கதையை நினைத்தோ, பிள்ளைபெருமாள் ஐயங்கார் தம் திருவரங்கக் கலம்பகத்தில் அம்மானை ஆடவைத்த அரிவையருள் ஒருத்தி, "எப்பொருளும் ஆனவர்தாம் ஆண்பெண் அலி அலரே ஆமாயின் ஜானகியைக் கொள்வாரோ தாரமாய் அம்மானை" என்று கேட்டதற்கு மற்றவள் சிறிதும் பதில் தாழாமல், "ஜானகியைத் தாரமாய்க் கொண்டதுவும் ஓர் சாபத்தால், அம்மானை" என்று விளம்பிவிட்டாள்? பின்னுள், மிதிலை வீதிவாய் உலாப்போந்த இராமனைக் கண்டு தன்வயந் துறந்து நிற்க அவன், தம்மைக் கண்ணெடுத்தும் பாராமற் செல்கின்றதால் மனஞ்சலித்துப் பேதுற்ற ஏழைகளுள்

> நாமத் தாலழி வாளொரு நன்னுதல்
> சேமத் தார்வில் லிறுத்தது தேருங்கால்
> தூமத் தார்குழற் றூமொழித் தோகைபால்
> காமத் தாலன்று கல்வியி னலென்றாள்.

[ஸ்ரீ இராமபிரானது திருநாமத்தைப் பன்னிப்பன்னி உருகுவாளான ஒருத்தி, "சீதையின் கன்னிமைக்குக் காவலாகின்ற வெற்றி மாலையணிந்த வில்லை இவன் இறுத்தது, என்ன காரணத்தால் என்பதை யோசிக்குமிடத்து, அது, அகிற்புகை பொருந்திய கூந்தலையும் தூயமொழிகளையும் உடைய மயில்போன்ற சீதையின்பால் காமத்தாலன்று. அவன் கற்ற வில்வித்தையின் திறத்தைக் காட்டும்பொருட்டே மற்றிது செய்ததா யிருக்கதேண்டும்"]

என்று நிச்சயித்தது, வடமொழி முதனூல் வகுத்த வழி நோக்குங்கால், அவளுற்ற வெறுப்பினுல் விளைந்த

மாற்றமே யல்லாது உண்மையும் அதுவேயாக முடிந்திருக்கும்.

காதல்மணமும் சிருங்கார இரஸமும் பிறமொழிக் காப்பிய மரபிற்குப் புதிய வல்லவாயினும், இராவண வதத்திலேயே கண்ணுயிருக்கின்ற முனிவரர் காதலைக் கொணர்ந்திங்குக் கொண்டாடத் தரியாமல் விடுத்தனர்போலும். மற்றுப் பிறர் இன்புறக்கண்டு தாம் இன்புறுதற்குக் காதலார் செய்தியின் சிறந்ததோர் செவ்வியில்லை. அகத்துறை நுணுக்கங்கள்யாவும் உய்த்துணர்ந்த செந்தமிழ்க் கவிகளோ எது எவ்வாறுயினும் இத்தகைய செவ்வியைச் சிறப்பிக்காது செல்லவிட்டார். ஆதலால் கம்பர், தம் முன்னூலைப் பின்பற்ற நினையாமல், அதன்பாற் கண்ட இவ்வற்றத்தையும் நிறைக்கும் வண்ணம், வில்லை இறுத்ததால் சீதைக்கு இராமன் கணவனுனன் என்று முடிக்காது, காதலால் இராமன் இடைநின்ற வில்லை இறுத்து அவளை எய்தினன் என்று நாட்டும்வகை, வில்லை அவன் காண்பதற்கும், அவ்வில்லைப்பற்றி யாரேனும் ஒருசொல் இயம்புதற்கும் முன்னரே, இருவரும் ஒருவரை ஒருவர் கண்டு காமுற்று ஒருங்கிய இரண்டுடற்கு உயிரொன்று ஆகிவிட்ட பெற்றியைச் செவ்விதின் செப்புவாராயினர். முதல்நூல் முறையில், சிவன் பிடித்த அவ்வில் இத்திருமணத்திற்குக் காரணமாய் இருந்தது. தமிழ் வழிநூல், இவர் காதலுக்கு இடையூறாய் அந்நெடுவில் கிடந்ததெனக் கருதிற்று. இவ்வேற்றுமையை இவ்விருநூல்களிலும் இராமன் அவ்வில்லைக் கையாளும் விதத்தினின்று நன்கு காணலாம். வில்லைக்கொணர்ந்து சபையில் வைத்ததும் அதனைக் கண்ணுற்ற இராமன் மிகுந்த ஆவலோடு, "நான் இதைத்தொடலாமோ? எடுத்துநான் நாணேற்றிப் பார்க்கலாமோ?" என்று விழைந்தனனென வான்மீகிமுனிவர் கூறுவதை நோக்குமிடத்து அவன் வீரமே பொங்கித் தன் சிலைக்கல்வியைக் காட்டுதற்கவாவினனென்பது புலப்படும். கம்பர் பாடிய கார்முகப்படலத்தில் வில்லைக்கண்ட இராமன் யாதும் இயம்பினனல்லன். அதன்பால் ஆர்வமும் காட்டினனல்லன். இராகவன் சென்று அவ்வில்லை எடுத்தவோர் தன்மையை

> ஆடக மால்வரை யன்னது தன்னைத்
> தேடரு மாமணி சீதை யெனும்பொற்
> சூடக வால்வளை சூட்டிட நீட்டும்
> ஏடவிழ் மாலையி தென்ன வெடுத்தான்

[பொன்மலை போன்ற அவ்வில்லை, தேடுவதற்கு அரிய மாமணியை யொத்த சீதை யென்னும் பொன்கடகமும் வெண்மையாய வளையல்களும் அணிந்த அவளுக்கு விவாகத்தில் சூட்டுவதற்கு நீட்டும் இதழ் அலர்ந்த மாலையே இது என்னும்படி எளிதாக எடுத்தான்]

என்று கம்பர் கவிக்கூற்றாகஅமைத்தாரேனும், காதலை நினைத்து அவன் அவ்வில்லைக் கையில் எடுத்தானேயல்லாது கல்வியை நினைத்தானல்லன் என்னுங்கருத்து அதனில் அடங்கியுளது. அஃதொன்றேயன்று, வான்மீகத்தில், இராகவன் அவ்வில்லை எடுத்து நிறுத்தி யாவருங்காண வளைத்து நாணேற்றி அந்நாணைத் தெறித்து இழுத்துக்கொண் டிருந்தனன். அப்படி இழுக்கும்பொழுது அவ்வில் இரண்டாக உடையலாயிற்று. இராமனுக்கு அங்கு அவ்வில்லை முறிக்க வேண்டும் என்னும் எண்ணம் இல்லை. வளைத்த வன்மையால் அது முறிய நேர்ந்தது. மற்றுக் கம்பரோ,

> தடுத்திமை யாம லிருந்தவர் தாளின்
> மடுத்தது நாணுதி வைத்தது நோக்கார்
> கடுப்பினை யாரு மறிந்திலர் கையால்
> எடுத்தது கண்டன ரிற்றது கேட்டார்

[அப்பொழுது இராமனது ஸாஹஸத்தைக் காண வேண்டி இமைகூடக் கொட்டாமல் பார்த்திருந்தவர்யாரும், இராமன் அவ்வில்லை வளைத்ததையாவது நாணை முனையில் பூட்டியதையாவது காணுதவராகி அவ்வேகத்தை அறிந்திலர். இராமன் வில்லைக் கையில் எடுத்ததைக் கண்டார், அந்த மாத்திரையிலே அது ஒடிந்த பேரொலியைக் கேட்டார்]

18903

எனச் சொல்வதால் தம் காதலுக்கு இடையே கிடந்ததெனுஞ் சீற்றத்தால் இராமன் அவ்வில்லை ஒடிப்பதற்கே எடுத்தானே என்று தோன்றுகின்றது. "'வளைத்தனன் நாணைப் பூட்டினன் தெறித்தனன்,' என்று என் முன்நூல் முனிவர் கூறுகின்றார்; அவை யாவும் நிகழவில்லை; முறிக்கக்கருதியே எடுத்து அவ்வில்லை முறித்து விட்டான், என்று அம்முனிவருக்கு எதிராக இயம்புதற்கு யான் அருகனல்லன்........ஆயினும், அவையெலாம் ஒருவரும் கண்டிலர், என்பது மட்டுமே கூறுவேன்....மற்று வேகத்தால் கண்டிலரோ யாதோ!" என்று கம்பர்பிரான் மிகுந்த வணக்கத்தோடு தன் கொள்கைக் கிணங்க முதனூலினின்று விலகுகின்ற ஒழுக்கத்தை இவ்விடத்தில் காண்கின்றோம்.

இன்னவிதம் அம்மாயப் பெரு வில் குறுக்கிடக் கிடந்த காதல் திரண்டவாறும் வளர்ந்தவாறும் முதிர்ந்தவாறும் கனிந்தவாறும், கனிந்தவக் காதலை நம்பியும் நங்கையும் நயந்துடன் கலந்துண்டவாறும் செப்புகின்ற கம்பர்தம் ஆற்றலின் அருமை அளவிடற்பாலதன்று.

கன்னிம்மாடத் தும்பரின்மாடே அன்னம் மாடும் முன்துறைகண் டயல்நின்ற மூவருள், அவ்வன்னங்களை விடுத்து மின்னலினரசைக் கண்ணுற்றான் இராமன். தன்னைக் கண்ணுற்றான் இராமன் என்பதைத் தோழியர்க் கிடையிருந்த தெரிவையாம் சீதையும்கண்டிருத்தல் வேண்டும். ஆயினும் இவ்விருவரும் நேராக எதிரெதிர் நோக்காமல் பொது நோக்காக அவ்வவர் நின்ற திசையில் இருந்தயாவையும் பார்த்தவர்போல் சிறிதுநேரம் பாவனை புரிந்திருத்தல் இயற்கையே. தன்னை அவள் பார்க்கின்ற பார்வையைப் பற்றுதற்கு அண்ணல் அவாவினும், நாணம் பெரிதுடைய அந்நங்கை கடைக்கணால் அவன்காணுமல் காணுமாறு கண்களவு ஆடிக் கரத்தலால் இவன்,

> யானோக்குங் காலை நினனோக்கு நோக்காக்காற்
> றானோக்கி மெல்ல நகும்.

[நான் அவளைப் பார்க்கின்றபோது அவள் தலைகுனிந்து நிலத்தை நோக்கி நின்றாள். நான் பார்க்காதபோது அவள் என்னைப் பார்த்து மெல்லச் சிரிக்கின்றாள்]

என்று தன்னுளே மகிழ்ந்து தானும் இளநகைபரும்பி மகிழ்ந்திருப்பான். இன்னவாறு சீதை கண்களவாடினக்கனள் என்பதைக் கம்பர் இங்குக் கூறவில்லையாயினும், அவளைக் கண்டகன்ற இராமன் அன்றுமாலை,

> வாள்நிலா முறுவல் கனிவாய் மதி
> காண லாவதொர் காலமுண் டாங்கொலோ

[ஒளிபொருந்திய நிலவைவீசும் தந்த பந்திகள் அமைந்த கொவ்வைக் கனிபோன்று வாயோடுகூடிய அவள் முகமாகிய சந்திரனை இன்னுமோர்முறை நான் காண நேருமோ]

என்று இரங்குவதால், கண்களவில் நகுகின்ற சீதையின் செவ்வி பெறப்படும். இம்முறுவல் இராமனது இதழ்களில் எதிர்நகை உலவுமாறு தூண்டியது. அதனை நினைத்தே சீதை "முந்தியென் உயிரையும் முறுவல் உண்டதே" என்று பின் இரங்குகின்றனள்.

இவ்வகைக் கண்ணுற் களவுசெய்து புன்முறுவல் புரிந்திருந்த செவ்வியோர் எதிர்நோக்கி ஒருவர்பால் ஒருவர் அகப்பட்டுக் கொண்டதை,

எண்ணரு நலத்தினா ளினையள் நின்றுழி
கண்ணொடு கண்ணிணை கவ்வி யொன்றையொன்
றுண்ணவு நிலைபெறா துணர்வு மொன்றிட
அண்ணலு நோக்கினா னவளு நோக்கினாள்

[எண்ணுவதற்கரிய நலங்கள் வாய்ந்த சீதை இவ்வாறு நின்றிருந்தபோது, ஒருவர்கண்ணோடு மற்றவர் கண்கள் ஆர்வத்தால் கவ்வி ஒன்றை ஒன்று உண்டு விழுங்கியதால், இவர்களது உணர்வும் தனித்தனி நிலையில் நிற்பதற் காற்றாதனவாய் ஒன்றாய்க் கலந்துவிடும்படி அண்ணலும் நோக்கினான் அவளும் எதிர்நோக்கினாள்]

என்னும் பாசுரத்தில் கம்பர் இனிது உரைக்கின்றார். பார்த்த இப்பார்வையின் குறியும் வேகமும் எத்தன்மையவெனின்,

நோக்கிய நோக்கெனும் நுதிகொள் வேலிணை
ஆக்கிய மதுகையான் றோளி னாழ்ந்தன
வீக்கிய கனைகழல் வீரன் செங்கணுந்
தாக்கணங் கனையவ ளனத்திற் றைத்தவே

[சீதாபிராட்டி பார்த்த பார்வையென்னும் அக்கூர்மை பொருந்திய இரண்டு வேல்களும் வலியமைந்த இராமனது தோள்களில் அழுந்தின. ஒலிக்கின்ற கழல் கட்டிய வீரனது சிவந்த கண்களும் அணங்கனைய சீதையின் தனங்களில் தைத்தன]

இவ்வாறு கண்ணொடு கண்ணிணை கவ்வி, உணர்வும் ஒன்றிட எதிரெதிர் கண்ணுற்று

பருகிய நோக்கெனும் பாசத் தாற்பிணித்
தொருவரை யொருவர்தம் முள்ள மீர்த்தலால்
வரிசிலை யண்ணலும் வாட்க ணங்கையும்
இருவரு மாறிப்புக் கிதய மெய்தினர்

[பருகிய அந்தப் பார்வையென்னும் கயிற்றினால் கட்டி ஒருவருடைய உள்ளத்தை மற்றவர் உள்ளம் இழுத்ததால், கட்டமைந்த வில்லை ஏந்திய அண்ணலும் வாள்போன்ற கண்களையுடைய நங்கையும் இருவரும் மாறிமாறி மற்றவர் இதயத்தைச் சேர்ந்துவிட்டனர்]

வரிசிலை இவனுக்கு இருந்தென், வாள்கண் அவளுக்கு இருந்தென்! உள்ளத்தைப்பற்றி யீர்க்கும் பாசத்தை யாரே துணிக்கவல்லார். முதலில் இவர்க்குக் கண்ணுங் கண்ணுங் கவ்வியது. பின் உணர்வும் உணர்வும் ஒன்றியது. பிறகு உள்ளமும் உள்ளமும் இழுக்க இருவருந்தம் தனிநிலை தீர்ந்து சேர்ந்தனர். எஞ்சியது உயிர்மாத்திரமே. அத்திறத்திலும்,

மருங்கிலா நங்கையும் வசையி லையனும்
ஒருங்கிய விரண்டுடற் குயிரொன் றாயினர்

[இடுப்பு இல்லாத சீதையும் நிர்த்தோஷமான இராமனும் ஒன்றுபட்ட இரண்டு உடலுக்கு உயிரும் ஒன்றே ஆயினர்]

ஆயின், இவ்விருவரும் தத்தம் நிலைமையைத் தெரிவித்துக்கொள்ளுமாறு யாதேனும் இயம்பினரோ எனின்,

கருங்கடற் பள்ளியிற் கலவி நீங்கிப்போய்ப்
பிரிந்தவர் கூடினாற் பேசல் வேண்டுமோ

[திருப்பாற்கடல் பள்ளியினின்று பிரிந்து வந்திருக்கின்றவரே, மறுபடி இங்குக்கூடுகின்றாராதலால் அவர்கள் பேசிக்கொள்ளக்கூட வேண்டுமோ]

என்றவாற்றால் கம்பர் அது மிகையெனக் காட்டுகின்றார். மற்று, வேண்டுமெனினும் தம்முளுரையாடற்கு ஈண்டிச் செவ்விதானேது! ஆதலால்

அந்தமி லழகனை யணுகி லாமையால்
பைந்தொடி யோவியப் பாவை போன்றனள்
சிந்தையு நிறையுமெய்ந் நலனும் பின்செல
மைந்தனு முனியொடு மறையப் போயினான்.

[எல்லையில்லா அழகுடைய இராமனை அங்ஙனே அணைத்தற்கு இயலாமையால் சீதை செயலற்று அசையாமல் சித்திரம் போல் நின்றனள். அன்னவளுடைய மனமும் நிறையும் உடலழகும் தன்பின்னே தொடர்ந்து வர இராமனும் முனிவனோடே ஏகி மறைந்தனன்.]

அகப்பொருள் வரலாறு.

பொருள்வயிற் பிரிவு.

12 பக்கத் தொடர்ச்சி

இப்பிரிவு அரசர்க்கு மாத்திரமே சிறைப்புடைத் தன்றி எல்லோர்க்கும் பொதுவானது. அறத்தைக் குறைவின்றிச் செய்து முடித்தற்கும், இன்பத்தை இனிது துய்த்தற்கும் பொருள் இன்றியமையாததாதலின் ஏற்ற காலங்களில் அதனை ஈட்ட முயலுதல் யாவர்க்கும் இயல்பான தொழிலே.

தருக்கிய பகைவரைச் செருக்கறுத்துத் திறைகோடலும், அலைவுற்றுக் குடிகள் கதற வெருவந்த செய்தொழுகும் வெங்கோலரசனை வென்றகற்றி, அவனுடைய நாட்டைத் தன்னடிப்படுத்துப் பொருள் கோடலும் அரசர் பொருள் செய்யும் வகையாம்.

தாம் துறைபோகக் கற்றநூல்களைப் பிறர்க்கு ஓதுவித்தும், பிறர் செய்யும் வேள்விகளுக்கு உறுப்பாகவும் குரவராகவும் உடனிருந்து உதவிபுரிந்து அதனை முற்றுவித்தும், இகல்கொண்டு பகைத்து நின்ற இருபெரு வேந்தரை நயமொழி நவின்று சந்து செய்வித்துச் சமாதானப்படுத்திப் போர் விலக்கிய வழியும், அவரவர் சம்மானித்துக்கொடுத்த பூசனைப் பொருள்களைக்கோடல் அந்தணர் பொருள் செய்யும் வழியாம்.

பல நாட்டினுஞ்சென்று ஆங்காங்கு விளையும் பொருள்களை வாங்கித்திரட்டிக் கலத்தினுங்காலினும் ஊக்கித் தம்மூரிலுய்த்து, நெடுநுகத்துப் பகல்போல நடுவு நின்ற நன்னெஞ்சினராய், வடுவஞ்சி வாய்மொழிந்து, தமவும் பிறவும் ஒப்பநாடிக் கொள்வது மிகைபடாமலும் கொடுப்பது குறைபடாமலும் அவற்றை விற்று நல்வழியாற் பொருளீட்டுதல் வணிகர் பொருள் செய்யும் முறையாம்.

இவ்வாறு பொருள் செய்யலுற்றார் பிறநாட்டிடைச்சென்று நெடுநாள் தங்க நேரும். இது காரணமாக நிகழும் பிரிவு 'பொருள்வயிற்பிரிவு' என்பதாம். இதுவே 'பொருட் பிணிப்பிரிவு' எனவும்படும். இப்

பிரிவிற்குரிய தலைமகன் அந்தணனாகவேனும், அரசனாகவேனும், வணிகனாகவேனும் இருத்தல்கூடும்.]

தனது முன்னோர் கூட்டிவைத்த பொருளையல்லாது தனது தாளாண்மையால் தான் வேறீட்டிய நிதியைக் கொண்டுநல்லறங்களைநடத்தலே புகழோடுபொருந்திய புண்ணியச் செயலாகும் என்று கேட்டுணர்ந்து, அது காரணமாக வேற்றுநாடுகள்செல்லக்கருதிய தலைமகன், இன்பத்திலே காலாழ்ந்த தன்மனதை முந்திப் பலகாலும் பலவாறு தேற்றித் திடப்படுத்திக்கொண்டபின், தன் காதலிக்குத்தனது பிரிவையுணர்த்தி அவளையுந்தேற்றி ஆற்றுவித்தகறலே நேரிதென்று நினைத்தான். ஆயினும் ஒன்றிரண்டுநாளும் தன்னைப்பிரிந்து தனித்திருக்கத் தரியாளாகிய தலைமகள் இந்நெடும்பிரிவிற்கு எள்ளளவும்இணங்காளென்று எண்ணிப் பாங்கிக்குத்தன துள்ளக்கருத்தை உணர்த்திப் பிந்திஅவளைக்கொண்டு தலைவிக்கு அதனை அறிவிக்கச் சொல்லிப் போதலே தக்கதென்று அவன் தீர்மானித்தான்.

தீர்மானித்து, அவன் பாங்கியை அழைத்து, 'நான் நின்னை வேண்டியபோதெல்லாம் என் குறைமுடித்துதவிய நேரிழைநல்லாய்: சின்னாளாய் என் மனத்திடைக் கிடந்து என்னை வலிக்கும் எண்ணமொன்றுண்டு. இவ்வுலகில் பொருளில்லாரை எல்லாரும் எள்ளுவரென்பதும், செல்வரை யாவரும் சிறப்புச் செய்வரென்பதும் நீ அறிந்தனையன்றே. செய்யுந் திறனறிந்து நல்லாற்றான் ஒருவன் ஈட்டிய பொருள் அவனுக்கு அறத்தையும் இன்பத்தையும் எளிதிற் பெறுவதற்கு உபகாரப்பட்டு இம்மைமறுமைப் பயன்களைத் தரவல்லதென்பது பொய்யாமொழி அன்றே.

'அறனீனும், இன்பமும் ஈனும், திறனறிந்து
தீதின்றி வந்த பொருள்.
ஒண்பொருள் தீதின்றி இயற்றியார்க் கெண்பொருள்
ஏனை இரண்டு மொருங்கு.

'அன்றியும் செருநர் செருக்கறுக்கும் எஃகு அதனிற் கூரியதொன்று இல்லையென்பதும் யாருமறிந்த விஷயமே. இத்தகைய மாட்சிவாய்ந்த பொருளை ஈட்டு நிமித்தம் நான் பிறநாடுகள் சென்றுவரக் கருதியுள்ளேன். செய்வினை முற்றி மீள்வதற்குப் பல திங்கள் செல்லினுஞ் செல்லும். அதுகாறும் பிரிவாற்றி இருப்பதற்கு உன்தலைவி ஒருப்படாளாதலின் அவளுக்கிதனை அறிவித்து ஏகுவதென்பது அசாத்தியம். நான் செய்யக்கருதிச் செல்லுங்காரியம் இன்னதென்பதையும், அதனால் ஏற்படக்கூடும் பிரிவினீட்டம் இத்துணைத்தென்பதையும், அவள் நன்கறியாவண்ணம் நான் விடைபெற்றுச் செல்வேன். நான் சென்றபின் மெல்ல இவற்றை அவளுக்குணர்த்தி அவளைத் தேற்றுவித்திருப்பது உன் கடமையாகும். உன்னை நானிது வேண்டினேன். காரியம் முடிந்தபின் அரைக்கணமும் நான் அங்கே தாழேன். நான் போவதற்குவேண்டிய ஏற்பாடுகளையும் அவள் சிறிதும் ஐயுறாவண்ணம் அமைத்திடல் வேண்டும்' என்றான். அதற்கவள், 'குருதிவேல் அண்ணால்: பொருள், தாம் சொல்லியவாறு பல நலங்களையும் பயக்குமாயினும், அப்பொருளை ஈட்டுவதற்குரியகாலம் இதுதானென்று ஒன்றில்லை. ஆனால் இன்பந்துய்த்தற்கேற்ற பருவம்இளமையொன்றே: அது கொன்னே கழிந்தால் அதனை மீட்டுத்தரவல்லதோ அப்பொருள்?

வளமையோ வைகலுஞ் செயலாகும்; மற்றிவள்
இளமையுந் தருவதோ இறந்த பின்னர்?

* செய்பொருள் முற்றிய
வளமையா னாகும் பொருளிது என்பாய்.
இளமையுங் காமமும் நின்பாணி நில்லா;
நறைமலர்க் கோதை குழைய முயங்கும்
முறைநாள் கழித லுறு அமைக் காவாய்.
கடைநாள் இதுவென் றறிந்தாரும் இல்லை.
போற்றாய், பெரும, நீ காமம் புகர்பட
வேற்றுமைக் கொண்டு பொருள்வயிற் போகுவாய்,
கூற்றமும் மூப்பும் மறந்தாரோ டோராங்கு
மாற்றுமைக் கொண்ட வழி.

அன்றியும் ஒருவரிடத்தும் நீடித்து நில்லாத அப்பொருளை நச்சிச்செல்லும் உஞ்செலவைத் தவிர்த்து, உம்மனைக்கண் அமர்ந்து வருவிருந்தோம்பி மனைவியுடன் கூடி இன்புற்றிரும். இதுவே நிலைத்தபொருள்

‡ பொருளல்லாற் பொருளுமுண் டோவென, யாழ,நின்
மருளிகொள் மடநோக்கம் மயக்கப்பட் டயர்த்தாயோ ?
காதலார் எவன்செய்ப பொருளில்லா தார்க்கென
ஏதிலார் கூறுஞ்சொல் பொருளாக மதித்தாயோ?
செம்மையி னிகந்தொரீஇப் பொருள்செய்வார்க் கப்பொருள்
இம்மையும் மறுமையும் பகையாவ தறியாயோ?
அதனால்,
எம்மையும் பொருளாக மதித்தீத்தை. நம்முன்நாம்
கவவுக்கை விடப்பெறும் பொருட்டிறத்
தவவுக்கை விடுதல். அதுமனும் பொருளே.

இஃதன்றியும் செல்வமென்பது எவர்க்கும் எளிதில் வாய்ப்பதொன்றன்று; முந்தை நல்வினையின் வழித்தாய் வருமேயன்றி முழுதும் முயற்சியால் பெறுவதன்று.

† சென்றோர் முகப்பப் பொருளுங் கிடவா.
ஒழிந்தவ ரெல்லாம் உண்ணாதுஞ் செல்லார்.

---

* பாலைக்கலி, 12. இதன்பொருள்:—

காமம்கெடும்படி அதனோடு மாறுபட்டுப்பொருளிடத்தே வேட்கையைச் செலுத்துகின்றவரே: நீர், இக்காமவின்பம் தேடிமுடித்த செல்வப் பெருக்காலே ஆவதொன்று என்பீர். ஆனால் இளமையுங் காமமும் உங்கைவசப்பட்டு நிலைத்திராது நாள்தோறும் கழிந்துபோம். ஆகையால் உங்காதலியுடன் முயங்குதற்கேற்ற நாள்கள் வறிது கழியாமல் பாதுகாப்பீராக. அன்றியும் இறக்குநாள் இதுவென்று அறிந்தவர்கள் உலகத்தில் எவருமில்லை. ஆதலால் யமனையும் மூப்பையும் மறந்தவர் போகும்வழியிலே அவருடன் போகாது அதற்கு மாறானவழியைப் பேணிக் கொள்வீராக.

‡ பாலைக்கலி, 14. இதன்பொருள்:—

செல்வப் பொருளாலன்றிப் பிறபொருளேதுவும் உளதாகுமோ என்று நீர் உமது மயங்கிய அறியாமையோடு கூடிய மதி மயக்கப்பட்டு ஐயுற்றீரோ? "கையிற் பொருளில்லாதார்க்கு அவராற் காதலிக்கப்பட்டவர் என்ன காரியத்தைச்செய்வார்?" என்று அயலார் கூறும் வெற்றுரையை உறுதிமொழியென நன்கு மதித்தீரோ? நல்வழியினின்று விலகிப்பொருளை ஈட்டுவார்க்கு அப்பொருள் அவரை விட்டு விரைவினீங்கிப் பகையாந்தன்மையை அறியீரோ? எம்மையும் பொருளாக மதிப்பீராக. நாம் தழுவி முயங்கிய முயக்கத்தைத் தவிர்த்துப்போய்ப் பெறும் பொருளிடத்தாசையை விடுவீராக. இதுவே நிலைத்த பொருள்.

† பாலைக்கலி, 18. இதன் பொருள்: —

தன்னைத்தேடி வந்தவர் யாவரும் உடனே வேண்டியவளவு முகந்துகொண்டு செல்லுமாறு பொருள் ஓரிடத்திலுங் கிடக்கவில்லை. பொருள் தேடிச் செல்லாதாரெல்லாம் உண்ணாமலும் இரார். இளமையும் காமமும் ஒருங்கே சேரப்பெற்றவர்கள் வேறு செல்வத்தாலடைய விரும்புவதொன்று உண்டோ? ஓராடையின் துண்டை ஒருகையாலே அரையிலுடுத்து ஒரு கையாலே உடலை மூடிக்கொண்டிருக்கும் மிக்க வறிஞராயினும் காதலனுங் காதலியும் தமது வாழ்நாள் முடிவளவும் ஒருவரைவிட்டொருவர் பிரியாது வாழும் வாழ்வே நல்வாழ்வாம். ஏனெனில், கழிந்த இளமையை மீட்பது அரிது.

இளமையுங் காமமும் ஓராங்குப் பெற்ருர்
வளமை விழைதக்க துண்டோ ? உளநாள்
ஒரோஒகை தம்முள் தழீஇ ஒரோஒகை
ஒன்றன்கூ ருடை உடுப்பவரே யாயினும்
ஒன்றிஞர் வாழ்க்கையே வாழ்க்கை. அரிதரோ
சென்ற இளமை தரற்கு.

உம்மையன்றிக் களைகண் பிறிதில்லாக் காரிகை யிவளைத் துணையின்றித் துயர்க்கடல் நீந்தவிட்டுத் தாம் பொருட்பிணி யுள்ளத்தொடு பிரிந்தேகல் அன்பன்று, அறனன்று, அருளுடையார்க்கு அழகுமன்று;

* தொலைவாகி இரந்தோர்க்கொன் றீயாமை இழிவென
மலையிறந்து செயல்சூழ்ந்த பொருள் பொருளாகுமோ,
நிலையிய கற்பிஞள், நீ நீப்பின் வாழாதாள்
தலையின்பம் பிரியாமை பொருளாயி னல்லதை?
இல்லலென இரந்தோர்க்கொன் றீயாமை இழிவெனக்
கல்லிறந்து செயல்சூழ்ந்த பொருள்பொரு ளாகுமோ,
தொல்லியல் வாழா அமைத் துணையெனப் புணர்ந்தவள்
புல்லாகம் பிரியாமை பொருளாயி னல்லதை?
இடனின்றி இரந்தோர்க்கொன் றீயாமைஇழிவெனக்
கடனிறந்து செயல்சூழ்ந்த பொருள்பொரு ளாகுமோ
வடமீன்போல் தொழுதேத்த வயங்கிய கற்பிஞள்
தடமென்ருேள் பிரியாமை பொருளாயி னல்லதை?
என இவள்,
புன்கண்கொண் டினையவும் பொருள்வயின் அகறல்
அன்பன்றென் றுமக்குரான் உணர்த்துமா றெவனே?

என்று இவ்வாறு தன் தலைவிக்காகப் பரிந்துபேசித் தன்னைச் செலவழுங்குவித்த பாங்கிக்கு அது பொழுது மேலொன்றுஞ் சொல்லமாட்டாது, தான் கொண்ட விருப்பத்தை விட்டொழித்தான்போல அவளுக்கு மறுமொழி சிலகூறி அன்று அவன் அகன்ருன்.

அவன் அவ்வாறு உரைத்தாஞயினும் அதை முற்றும் நம்பாத பாங்கி அவன் கருத்தை முன்னரே தலைவிக்கு ஒருவாறுணர்த்தி அவள் மனதை அதற்கமைத்துவைத்தல் நலமெனவுன்னி, மறுநாள் தானுந் தலைவியுந் தனித்திருந்தகாலை, "செம்மணிக்கலன் பூண்ட செழுந்திரு அனையாய், பொன்னுலன்றி இல்லறம்போன்ற நல்லறம்எவையும் நனிநடைபெரு என்பதை நன்குணர்ந்து நங்காவலர் பொருள்வயிற் பிரியுங் கருத்துடையராய் நேற்று என்னிடத்துப் பொருளின் இன்றியமையாத் தன்மையையும், இருமையையும் பயக்கும் அதன் சிறப்பையும், தனது மூதாதையர் படைத்துவைத்த நிதி மிகுதியாயிருப்பினும், தனது சொந்தத் தாளாண்மையாற் கூட்டிய பொருள்கொண்டு தருமங்களைப் புரிதலே நல்லாண் மகன் செய்கட னென்றும்,

அருள்கொண்டி டியற்றும் அறமும், அறநெறி
யாய்ந்தமென்பூச்
சுருள்கொண்ட கோதையர் தோள்புண ரின்பமும்,
சூழ்சுரும்பு
மருள்கொண்டு பாடு மதுமலர்ச் சோலை
மயிலனையாய்,
பொருள்கொண் டொழியமுற் ருதென்றுன் அன்பர்
புகன்றனரே.

"அவருடைய உள்ளத்துள்ள கள்ளக் கருத்தை அறிந்த நான் அதைத் தவிர்க்க விரும்பி, 'ஐய,

*இடைகொண்டு பொருள்வயின் இறத்திநீ எனக்கேட்பின்
உடைபுநெஞ் சுகவாங்கே ஒளியோடற் பாள்மன்னே,
படையமை சேக்கையுட் பாயலின் அறியாய்நீ
புடைபெயர்வா யாயினும் புலம்புகொண் டினைபவள்.
முனிவின்றி முயல்பொருட் கிறத்திநீ எனக்கேட்பிற்
பனியகண் படலொல்லா படர்கூர்கிற் பாள்மன்னே,
நனிகொண்ட சாயலாள் நயந்துநீ நகையாகத்
துனிசெய்து நீடினுந் துறப்பஞ்சிக் கலுழ்பவள்.
பொருளேக்கிப் பிரிந்துநீ போகுதி எனக்கேட்பின்
மருளேக்கம் மடிந்தாங்கே மயல்கூர்கிற் பாள்மன்னே,
இருளேக்கம் இடையின்றி ஈரத்தி னியன்ற நின்
அருளேக்கம் அழியினும் அவலங்கொண் டழிபவள்.''

என்று அவர் பிரிவிகண் நின்னிலையை எடுத்து நான் கூற, நீளிடைச் செலவை நெடுந்தகை ஒழிந்தனர்.'' என்ருள். அன்றுமுதல் கவலையற்றிருந்தாள் தலைமகள்.

ஆயினும் சிலநாள் கழிந்தபின்னர்த் தலைமகன் மறுபடியும் தோழியை நெருங்கி, "நட்டாரின்மையும், கேளிர்துன்பமும், ஒட்டார் செருக்கும் ஒருங்கே

* பாலைக்கலி 1. இதன் பொருள்:—

நிலைத்த கற்பையுடையவளும், நீர் பிரிந்தால் உயிர் தரியாதவளுமாகிய உங்காதலியின் மேலான இன்பத்தை இழவாதிருத்தல் பொருளாகுமேயன்றி, முன் தாம் படைத்த பொருள் தொலைந்துவிட நல்கூர்ந்து வந்திரந்தவர்க்கு ஒன்றுங் கொடாதிருப்பது இழிவெனவெண்ணி மலைப்பிரதேசங்களைக் கடந்துசென்று நீர் சம்பாதிக்க நினைக்கும் பொருளும் நன்குமதிக்கத்தக்க தாகுமோ?

பழைய உழுவலன்பிது பிழையாதென் றுன்னி உம்மைத் தனக்குற்றதுணைவராகக்கொண்டு உம்மைமணந்தவளுடைய புல்லி யின்புறுதற்குரிய மார்பைப் பிரியாதிருத்தல் பொருளாகுமேயன்றி, இன்மையால் வருந்தி வந்திரந்தோர்க்கொன்றுங் கொடாதிருத்தல் இழிவெனவெண்ணி மலை கடந்துசென்று நீர் சம்பாதிக்க நினைக்கும் பொருளும்நன்கு மதிக்கத் தக்கதொரு பொருளாகுமோ?

வடமீன்போல் எல்லாருந் தொழுதேத்தும்படி விளங்கிய கற்பினையுடையவளது பெரிய மெல்லிய தோள்களைப் பிரியாதிருத்தல் பொருளாகுமே யன்றி, வறுமையால் வருந்தி வந்திரந்தவர்க்கு ஒன்றுங் கொடாதிருத்தல் இழிவெனவெண்ணிக் காட்டைக் கடந்துசென்று நீர் சம்பாதிக்க நினைக்கும் பொருளும் நன்கு மதிக்கத்தக்கதொரு பொருளாகுமோ? எனவும், இவளிங்கே உம்பிரிவால் பொலிவழிந்து துயர்கூரவிட்டு நீரங்கே பொருள்காரணமாகப் பிரிதல் அன்பன்று எனவும், எல்லாமறிந்த உமக்கு நான் எடுத்துரைப்பது எற்றுக்கோ?''

*பாலைக்கலி, 10. இதன் பொருள்:—

பஞ்சடைத்த மெத்தையின்பால் துயிலுமிடத்துத் தற்செயலாய் நீ சிறிதப்பாற் பெயரினும் தமியளென வருந்துபவளாகிய இவள், நீ இவ்வின்பக் கூட்டத்தினிடையே பொருளாசையுற்றுப் போவையென நான் சொல்லக்கேட்பின், திண்ணமாக அப்பொழுதே நெஞ்சுடைந்தழியத் தன் மேனியொளியும் அழிவாள்.

விளையாட்டை விரும்பிப் புலவி செய்து சிறிது அங்ஙே காலநீட்டிப்பினும் அத்துணைப் பிரிவுக்கஞ்சிக் கலங்கும் மிகவும் மென்மையளாகிய இவள், வெறுப்பின்றி முயன்று தேடும் பொருள் குறித்து நீ போவையென்று நான் கூறக் கேட்பின், திண்ணமாக, நீர்மல்கிய கண்கள் துயில் கொள்ளாது மிகவும் வருந்துவாள்.

வருத்தத்தைத்தரும் இன்னுப்பார்வை இடைப்படாது என்றும் இன்பத்தைச்செய்கின்ற நினது அருட் பார்வை சிறிது நீங்கினும் வருந்தி நெஞ்சழிபவளாகிய இவள், திண்ணமாக, நீ பொருள் காரணமாகத் தன்னைப் பிரிந்து போவையென நான் சொல்லக் கேட்பின், உடனே நீ முன் கண்டு மயங்கிய முகத்தழகு கெட்டு மிகவும் மயங்குவாள்.

திட, நாட்டிடைச்சென்று நவநிதி தேடேன், டையிருந்து விழைவுறு போகம் துய்த்திடு ால் தூயோரென்னைக் கயவனென்றே ஏசுவரன் நாளையே நான் புறப்பட நிச்சயித்துள்ளேன். செய்யாது என்னைப் போகவிடுத்துத் தலைவிக் க்க சமாதானங்களைச் சாற்றி ஆற்றுவித்திரு.'' வற்புறுத்திச் சொன்னுன்.

ளத்தே அதற்கு ஒருவாறு ஒப்பிய பாங்கி, கையில் வெண்ணெய் இருக்க நெய்க்கலைவா போல, இங்கு உங்கைக்குவாய்த்த *பொன்னை மாதங்கத்தையும், தனத்தையும் மதிக்காது பொன்னையுந் தங்கத்தையுந் தனத்தையுந் ச்செல்வது ஏனே ?

† மணமா ரளகக் கனமதிற் ருதுகண்
மாழைமுத்தின்
ணமார்கொங் கைத்தசும் பங்கா சொளிர்காஞ்சி
காட்டுமரைப்
பணமார்நின் பொன்னிருக் கத்தீச் சுரத்தே
படருழந்தே,
ணமார் சுடரிலை வேல, பொன்தேட
நினைத்தலென்னே.

று கழறித் தெருட்டினள். தெருட்டவுந் தெளி பொருளின்மேலே நினைவாய் நின்ற தலைமகனது லைவைக்கண்டு அவள், "இனிநான் சொல்லக்கட ஒன்றுமில்லை

னைவா ரணந்திரி வெஞ்சுரம் போக இரும்பொருட்கு
ாகில் உம்மை விலக்குகி லேம்செல்லும் நீள்சுரத்து,
ா ரகலல்குல் வல்லியை நீர்வரு வார்சிலரை
ா தொழியும், வினவின்முற் ருது வினையுமக்கே."

றுணர்த்தி விடுத்தாள்.

றுநாள் தலைவனும் தன்னிஷ்டப்படியே சென்றான். இருநாள் சென்றபின் அதனை அவள் தலைநக்குணர்த்தி, "நின்முன்னின்று தன் பிரிவுணர்த்ல் நீ அறிவுகலங்கி உணர்வழிந்து மாழ்குவை ா உட்கொண்டு உனக்குணர்த்தத்துணியாது, ருள்முடித்துக் கடிதின் மீள்வலென எனக்கி ந்து நங்காதலர் வினைவயிற் சென்ருர். நீ கவலா '' என்றுரைக்கத் தலைவி இடியொலி கேட்ட பெனப்பதறி,

2 புறந்தாழ் அளகஞ் சரிய, புளகம் புரியக்கொங்கை,
சிறந்தாக மூழ்கித் திளைத்ததெல்லாம், செல்வ மேவிரும்பி
மறந்தார். முடிய மறந்தன ராயின், மடநெஞ்சமே,
இறந்தால் இனிப்பிற வாகாப்பெண் பால்வந்தெழுமையுமே.

என்று நெஞ்சொடு கூறிப்புலந்தாள். புலந்தவள் நாள் கழியக்கழிய ஆற்ருத்துயரந் தலைக்கொண்டு கங்குலெல்லாம் கண்படைபெருது கலுழ்ந்து கவன்று, கவினலனழிந்து உடல்மெலிந்து வாடாநின்ருள்; வரவு தாழ்த்த வன்கணவர் பிரிந்தகன்ற நாட்களை நிலங்குழிய விரலிட்டெண்ணி விரலுந் தேயாநின்ருள்; வருவதாக அவன் குறித்துச்சென்ற பருவம் வந்தும் அவன் வாரமைகண்டு மிகவும் வருந்தாநின்ருள். இங்கு இவளுடைய நிலை இவ்வாருக, சென்ற நாட்டிடைத் தலைமகன் தலைவியின் நினைவை ஒருகணமுந் தவிராது, கனவிலும் நனவிலும் அவளுருவைக்கண்டு வருந்தி அரிதிற்றன் வினைமுற்றி, குறித்துச்சென்ற பருவம் வரக்கண்டு, விரைந்து தேர்மீது மீளலுற்ருன். அவன் தேர் வரக்கண்ட தோழி பெருமகிழ்ச்சி கொண்டு தலைவியையுற்று,

3 குரவலர் பூங்குழ லார்நெடு வீதி குறுக, வண்டு
விரவலர் தாவ, மிகமிக வாழ்த்தி வியந்துமுன்னின்
றிரவல ரேத்த, இனவளை யார்ப்ப, இயமுழங்கப்
புரவலர் இன்றுவந் தார்,திரு வே,தம் பொருள்முடித்தே.

என்றுரைக்கக் கேட்டதும் தலைமகள்,

4 வார்வற ளேக்கி வாடிய வான்பயிர்
கார்வர ளேக்கிக் கலித்தாற் போல

உயிர்தளிர்த்து, உவகை தழைத்தோங்க இன்முக மலர்ந்து எதிர்சென்றழைத்துஅவனை யுடன்கொண்டு ஒண்மனை புக்காள். புக்குக் கண்பனிசோரக் காதலனை நோக்கி, "பிரியேனென்ற சூளுரை பொய்த்துச் சென்றீர், கடிதின் வந்தீர். எம்மை என்றேனுந் தாம் அங்கு நினைத்ததுண்டோ'' ? என வினவினளுக்கு அவன்,

5 எண்ணு அரும்பொருட் கேகிய நாட்டில் எனைப்பகலும்
கண்ணுர வந்துன் கவினலங் காட்டினை; கங்குலினும்
தண்ணுர் மலர்ப்பள்ளி தங்க விடாது தழுவினை நீ,
பெண்ணு ரமுதனை யாய், வினையேனைப் பிரிந்ததென்ருே?

என்றும்,

இவைகள் சிலேஷை. பொன் - திருமகள் (போன்ற வி). மாதங்கம் - மாது (பெண்ணின்) அங்கம். தனம் - ங்கை.

இதில் கனம், தாது, மாழை, தசும்பு, பொன் என் தங்கத்தின் பரியாயப் பெயர்களும், முத்து, காசு, ம் என்னும் பதங்களும் வந்துள்ள நயங்காண்க.

ப்பாட்டுக்களின் பொருள்:—

பெருமைவாய்ந்த பொருள் காரணமாக, யானைகள் ங்கூட்டமாகச் சஞ்சரிக்குங் கொடிய காட்டின் வழிச் செல்ல நீர் கருதினீராயின் உம்மை யாம் தடுக்கவல் அல்லேம். ஆனுல் அரையில் மணிகளிழைத்த அரைப் டகை அணிந்த பூங்கொடிபோன்ற தலைவியின் க்ஷேமத் பற்றி இங்கிருந்து அங்குவருவாரை விசாரியமலிரும். ரிப்பீராயின் (இங்கிவளுக்குற்றதை அறிவீர். அறியின்) காரியம் முடியாமற்போம். (இவள் இறந்துபடுவாள் பது குறிப்பு.)

2. அறியாமை பொருந்திய நெஞ்சே, நங்காதலர் முன்னே என் கூந்தலவிழ்ந்து பின்புறத்தே தாழவும், கொங்கையிடத்துப் புளகம் உண்டாகவும் என்னைத்தழுவிக்கூடி இடைவிடாது இன்புற்றதையெல்லாம் மறந்தார். அறவே என்னை மறந்தொழிந்தாராயின் நான் இறப்பது திண்ணம். இறந்தேனுயின் இனி எப்பிறப்பிலும் பெண்ணுகப் பிறத்தலை நான் விரும்பேன்.

3. குராமலர்களைச் சூடிப் பொலிவுபெற்ற கூந்தலார் காணவிரும்பி நீண்ட வீதியிலே நெருங்கவும், வண்டுமொய்த்த நறும்பூக்களைப் பலர் மேலேவீசவும், யாசிப்பவர் மிகவும் வியந்து எதிரே நின்று வாழ்த்திப்புகழவும், சங்குகள் ஒலிக்கவும், வாத்தியங்கள் முழங்கவும், இன்று தலைவர் பொருளைத் திரட்டிக்கொண்டு வந்துவிட்டார். திருமகளனையாய், இனி வருந்ாதே.

4. நீர்வற்றியதைக் கண்டுவாடிய நல்ல பயிர் மழைமேகம் வந்ததைக்கண்டு தலையெடுத்துத் தழைத்தாற்போல.

5. அரும்பொருளைத்தேடி நான் சென்ற கானிடை என் தனிமையைப் பரிகரிக்க எண்ணிவந்து நீ பகலெல்லாம் என் கண்ணிரம்ப உனது அழகையுஞ் சோபையையும் காட்டினுய், இரவெல்லாம் குளிர்ந்த பூவமளியிலே தூங்கவிடாது என்னைத் தழுவினுய். நீ என்னைப் பிரிந்திருந்தது என்ருே? நான் அறியேன். (முன்னது உருவெளித்தோற்றத்தால், பின்னது கனவால்.)

6 கருங்குல வெற்பும், கடும்புனலாறும்,வெங்கானுமெல்லாம்
சுருங்க இமைப்பொழு திற்கொண்டு மீண்டன, தோகையன்
மருங்கு லெடுத்த மகவும்,உள் ளாவி வருந்துயிர்ப்பும்,[ளுய்
நெருங்கும் வளைக்கையின் நீவநில் லாதகண் ணீரும்வந்தே
என்றும் நயமொழி நல்கித் தேற்ற, அவளும்

7 ஆம்பல் வாயும் முகமும் மலர்ந்திடத்
தேம்பு நுண்ணிடை நேர்வத் திரண்முலை
எம்ப லாசைக் கிரட்டிவந் தெய்தினுள்,
பாம்பு கான்ற பனிமதிப் பான்மையாள்.

பின்பு இன்பந் தலைசிறப்ப இருவரும் அளவளாவிக் கூடிக்குலாவிக் களித்தார்கள். பிறகு

வேந்தன் பொருளுக் குப்போய் வந்தவெம் மை யெல்லாம்
பூந்தண் படையமை சேக்கையிற் போக்கினள் பூவையன்
[ளுள்.

அவனும்

8 முருந்தே யனைய முறுவலும் செவ்வி முகமுங்கண்டு,
மருந்தே யனைய மழலையுங் கேட்டு, மதுகரஞ்சூழ்
செருந்தே ரலங்கற் செறிகுழல் மோந்துசித் தங்களிகூர்ந்
திருந்தேன்; இனிவருந் தேன்இள வாடையெறி துளிக்கே.

என்று அவ்வின்ப நலத்தைப் பாராட்டிக் காதலியுடன் கூடி இல்லறத்தை இனிது நடத்தி இறுமாப்புற்றிருந்தான்.

---

6. நீ இடுப்பிலேந்திய குழந்தையும், உள்ளே உயிரைவருத்திய துன்பத்தாலுண்டான உனது வெய்துயிர்ப்பும், வளைகள் நெருங்கிய கையால் துடைக்கவும் நில்லாதொழுகும் உன் கண்ணீருமே கரியபெரிய மலைகளையும், கடுகிச்செல்லுங் காட்டாறுகளையும், வெப்பந்தணியாத காட்டையும் சுருங்கச்செய்து என்னை விரைவில் இங்கே இழுத்துக் கொண்டு வந்தன.

7. தேய்ந்த நுண்ணிய இடை வருந்தும்படி பருத்தெழுந்த தனபாரங்களையுடைய தலைமகள் இராகு விழுங்கி உமிழ்ந்த மதியைப்போல் செவ்வாம்பலையொத்த வாயும், சந்திரனையொத்த முகமும் மலர்ந்து தயங்க, தனது ஆசையைக் காட்டிலும் இருமடங்கு களிப்புற்றுள்.

8. உன்னுடைய, பட்சியிறகின் அடியைப்போன்ற பல்லின் புன்னகையையும், முகத்தின் அழகையுங்கண்டும், அமிர்தம் போன்றினிய மழலைச் சொற்களைக் கேட்டும், வண்டுகள் மொய்க்கு பூவிதழ்களாற் றொடுத்த அழகிய கண்ணிகள் சூடிய அடர்ந்த கூந்தலை மோந்தும், இன்று மனங்களித்தேன். இனி ஒருபோதும் இளந்தென்றல் தூற்றுஞ் சீகரத்துக்குச் சிறிதும் வருந்தேன்.

இக்கால இஸ்லாம்

ஸிலோன் ஐக்கோர்ட்டு நீதிபதியான ஜஸ்டிஸ் M.K. அக்பர் என்பார் ஜனவரிமாதம் 5-ந்தேதி அன்று சென்னை மவுண்டுரோட்டிலுள்ள லாலி மண்டபத்தில் செய்த உபந்நியாசம் வருமாறு:—

"நான் இஸ்லாம் மதத்தின்பால் பற்றுடையவனே. அப்படியிருந்தும் நான் தாடி வைத்துக்கொள்ளாததற்குக் காரணம், இந்த நூற்றுண்டு ஆண்மையற்று இருப்பதே. முஸ்லீம்கள் ஆண்மையோடு வாழக் கற்றுக்கொள்ளுங் காலத்தில் நானும் தாடிவைத்துக் கொள்வேன். எனக்கு மதப்பற்று உண்டு. என்றுலும் மதவெறி பிடித்தவன் நான் அல்லன். உலகத்திலுள்ள எல்லா மதத்திலும் வாய்மையுண்டு. உன் மதம் என்மதம் என்று மாந்தர் இடும்பேரில் முக்தியில்லை. எம்மதத்தினுயினும் சரி, ஒருவன் மதம் வகுத்தவாறு உயர்ந்த வாழ்க்கை நடத்துவானுயின் அவன் முக்திபெறல் கூடும். மதத்தின்பால் பற்றேசிறிதுமிலாது தாடியை வளர்த்துக்கொண்டு போரிடுதலை நான் வெறுக்கின்றேன். சுல்தான்கள் 45 மனைவிகளை வைத்துக்கொண்டு இருக்கையில் தாடியினுல் என்ன பயன். எனக்கு அதிகாரம் இருப்பின் அவர்களைச் சிறைக்கு அனுப்பிவிடுவேன்."

[இஸ்லாம் மதத்தில் இப்பொழுது காணப்படும் சிறுமைகளை எடுத்துக் காட்டி அவைகளை முஸ்லீம்கள் அகற்றவேண்டிய அவசியத்தை வற்புறுத்திப் பின்னுங் கூறியதாவது]:—

தாடிமாத்திரம் இருப்பதால் அல்லா ஏமாந்து போகமாட்டார். உண்மையில் மதத்தைப் படித்து அதனுல் ஆன்ம அறிவு படைக்கவேண்டுமென்பதை எனது முஸ்லிம் சகோதரர்களுக்குச் சொல்லவிரும்புகிறேன். வாழ்க்கை உயரவேண்டும். நமது நடத்தை சிறக்கவேண்டும். இஸ்லாம் மதம் விழுந்த வீழ்ச்சிக்குக் காரணம், முஸ்லிம் அரசர்கள் நியாயத்தையும் தர்மத்தையும் விற்றுவிட்டதேதான். நியாயத்தை விற்றுவிட்டவர்கள்பால் அல்லா கருணையைச் செலுத்த மாட்டார்.

இன்னெரு விஷயம் கூறவிரும்புகிறேன். கோவிலுக்குமுன் இந்துக்கள் வாத்தியம்வாசிக்கலாகாதென முகமதியர் இடும் போரைக்காணக் கூசுகின்றேன். வாத்தியம் எப்படி நமது வழிபாட்டிற்கு இடையூறுய் அமையும் என்பது எனக்கு விளங்கவில்லை. இருக்கும் இடையூறுகளுக்கிடையில் மனதை அல்லாவின்பால் செலுத்தி நிஷ்டையில் அமராது இந்துக்களோடு போரிடப் புறப்படுவதுதான் மதமோ, சொல்வீர். கடவுள் உங்களுக்காக மாத்திரம் இவ்வுலகத்தைப் படைத்ததில்லை. எல்லா மதத்தினருக்கும் அதில் இடமுண்டு. மற்ற மதங்களைத் தூஷியாதும், மற்றவர்களோடு நட்புமுறையில் நடந்தும் வந்தால் அவர்களும் உங்கள் மீது அன்போடிருப்பர். எனவே முகமதியச் சிறுவர்களை, மதவெறியில்லாது காந்தியின்போதனையை ஏற்று வாழுமாறு, கேட்டுக்கொள்கின்றேன்.

தற்கால ஆராய்ச்சியால் மாந்தர் வந்தமுடிவுஎனக்கு இஸ்லாம் மதத்தின்பால் பற்றை உண்டாக்கியது. ஒருவரது உள்ளத்தின் பிரதிபிம்பமே உலகம் என்று அல்லா கூறியுள்ளார். உள்ளத்தினில் எழும் சக்தியே கடவுள். அச்சக்தியை அறிந்து அதனுடன் இயைந்து வாழவேண்டும். இஸ்லாம்மதம் இதைத்தான் கூறிவைக்கின்றது. இவ்வாய்மையை வெளியிடவே இஸ்லாம்மதம் கடவுளின் கருணையால் மாந்தருக்குத் தரப்பட்டது. இந்த உண்மையை அறிந்து தெய்வவாழ்க்கைவாழ நாம் முயலவேண்டும். அவ்வாழ்க்கையை நமதாக எய்தப்பெற, விரதமிருத்தலும், பிரார்த்தனையும் அவசியம். யோகிகள் அப்படித்தான் செய்தனர். காந்தி அடிகள் உண்ணுவிரதம் பூணுவது மதற்கே.

பதினெட்டாம் பாஷை

இந்த நூதன பாஷையை 15 நிமிஷங்களில் கற்றுக்கொண்டு பேசவும், எழுதவும் ஆரம்பித்துவிடலாம். இந்தப்பாஷையில் வியாபாரரகசியங்களைக் குறித்துக்கொண்டால் பிறர் கண்டுகொள்ள முடியாது. இப்பாஷையில் ஸ்திரீகள் கணவர்களுடன் குடும்பரகசியத்தைப் பேசினுல் பக்கத்திலுள்ளவர்கள் ஒற்றுக்கேட்டுப் பிறரிடம் சொல்லிக் கோள்மூட்ட முடியாது. இது ஓர் அபூர்வ தமிழ்ப்பாஷை. சொல்பகாபிகளே இருக்கின்றன. முந்துங்கள். விலை அணு 8.

அமிர்த குணபோதினி

இதுபோன்ற நவீன மாதாந்தர ஸஞ்சிகை இதுவரைத் தமிழில் வெளிவந்ததில்லை. இதிலுள்ள விஷயங்கள் யாவும் வாசிப்பவர்கள் மனதிற்குப் புதியதாகவும் அற்புதமாகவும் புலப்படும். இப்பத்திரிகையில் ஜாதி, மத வித்தியாசமின்றிச் சகல மதஸ்தர்களையும் களிக்கச்செய்யும் வியாஸங்களைப் பிரதிமாத சஞ்சிகையிலும் காணலாம். மாதிரி காபி ஒன்று வாங்கி வாசித்தபின் பிறர் சிபார்சு இல்லாமல் நீங்களே வாங்குவீர்களென்பது நிச்சயம். பிரதி மாதம் 56 பக்கங்களுடன் வெளிவரும். வருஷ சந்தா ரூபா 1. வெளிநாடு ரூபா 1—4—0. மாதிரி காபி இனும்.

10-ம் பதிப்பு] **ஆங்கில ஆசான்** [வந்துவிட்டது

[எமது லேடி டிரேட் மார்க்கைப் பார்த்து வாங்குங்கள்.]

60-நாட்களில் இங்கிலீஷ் கற்றுக்கொள்ளக் கூடியவிதமாய் அப்பியாசப் பாடங்களாக வகுத்து முன் பதிப்புக்களைவிட அதிக பக்கங்கள் சேர்த்துப் பெரிய எழுத்துக்களில் அச்சிட்டுள்ளோம். இதுவரையில் 53100 புத்தகங்கள் செலவாயிருப்பதாலேயே இதன் மேன்மை விளங்கும். இப்பத்தாம் பதிப்பு ஆங்கில ஆசான்போல் வேறு எந்தப் புத்தகங்களிலிருந்தும் அவ்வளவு சீக்கிரத்தில் இங்கிலீஷ் கற்றுக்கொள்ள முடியாது. நமது முன்பதிப்புப் புத்தகங்களை வைத்திருப்பவர்கள்கூட 10-ம் பதிப்பைப் பார்த்தால் இதிலும் ஒன்று சட்டாயம் வாங்க வேண்டுமென்று எண்ணுவார்கள். இதில் 1-அணு முதல் 3000-ரூபா வரையில் சம்பளம் வாடகைக் கணக்கு உளது. 800-பக்கங்களுக்கு மேல்கொண்ட அழகிய சீமை கலிகோ பைண்டு விலை ரூபா 2.

தி. இராஜகோபால் முதலியார், 302, தங்கசாலைவீதி, மதராஸ்.

முருகன், ஓர் உழவன்.

ஸ்ரீமான், K. S. வெங்கடாமணி M.A., B. L., ஆங்கிலத்தில் இயற்றியதும், இந்த நாட்டில் மாத்திரமல்லாமல் ஐரோப்பிய தேசங்களிலும் பெரிது கொண்டாடப் பெறுகின்றதுமான "Murugan, The Tiller" என்னும்

நாவல் நூலிற்கு

கிருஷ்ண குமாரி

என்பவரால் எழுதப்பெற்ற தமிழ் மொழிபெயர்ப்பு.

கதையின் அழகும் வாழ்க்கையின் தத்துவங்களும், மாநட இயற்கையும் பலவேறு பாத்திரங்களின் அமைப்பும் வாய்ந்த இப்புத்தகம் எளியநடையில் அமைந்திருக்கின்றது. 400 பக்கங்கள் கொண்டது)

விலை ரூ. **1-8-0** (வி. பி. சார்ஜ் வேறு). மானேஜர்,

கலா நிலயம்,

11, வேளாளர் தெரு, புரசைபாக்கம், சென்னை.

வெண்பாப் புலி என்ற புகழோடு விளங்கியவரும்

ஸ்ரீ மீனுக்ஷி சுந்தரம் பிள்ளையவர்கள் மாணுக்கரும் ஆகிய

ஸ்ரீ. தி. சு. வேலுசாமிப்பிள்ளை அவர்கள் இயற்றிய

கந்தபுராண வெண்பா

ஆறு காண்டங்களும் 5665 செய்யுள்களும் அடங்கியது.

இதுகாறும் வெளிவந்திராத இந்நூல் ஓதற்கினிய நேரிசை வெண்பாக்களால் அமைந்தது. அறுமுகக் கடவுளின் அருள்பெருகப் பாடிய இவ்வெண்பாக்கள் கற்றோர் இதயத்தைக் களிக்கச் செய்யும் தன்மையன.

விலை ரூ. **4-8-0**. வி. பி. சார்ஜ் வேறு.

மானேஜர், கலா நிலயம்,

11, வேளாளர் தெரு, சென்னைப்பட்டினம்.

இந்தியாவிலும் பர்மாவிலும்

எங்கள்

தங்கக்கலன்களும் வெள்ளிக்கலன்களும்

உபயோகத்தோடு சுத்தமும் அழகும் சேர்ந்திருக்குந் தரத்தினை அனைவரும் அறிவர்.

சுத்தம்

சுத்த வெள்ளியும் சவரன் பொன்னுமே உபயோகப் படுத்துகின்றோம். உலோகத்தின் சுத்தத்திற்கு அடையாளமாக நாங்கள் செய்த சாமான்களின்மேல் டையமண்ட் டிரேட் மார்க் காணப்படும்.

அழகு

எமது மாதிரிகள் புதியன. கண்ணைக் கவரும் அழகுடையன. எங்களுக்கே பிரத்தியேகமான இவை, நவத்திலும் நவமான நாகரிகமுடைய வெள்ளி வேலைகளின் அழகையும் பெருமையையும் அமையப் பெற்றிருக்கின்றன.

உபயோகம்

சுத்த வெள்ளிச் சாமான்களையே வாங்குவதன் இலாபம் எவருக்கும் தெரியும். வாங்கும் விலையையும், எத்தனை வருஷம் அந்தச்சாமானின் அழகு அழியாம லிருக்குமென்பதையும் வகுத்துப் பார்த்தால், "சிறந்த சாமான்களே மலிந்த சாமான்களுமாகும்" என்னும் பழமொழி பழுதாகாததை யறிவீர்.

குடும்பத்து வெள்ளிச் சாமான்கள் யாவராலும் மனங்கனிந்து பாராட்டப்படுவன. அவைகளைக் காணுந்தோறும் முன்னை நினைவுகள் பல ஒன்றன்பின் ஒன்றாய்த் தொடர்வது இயற்கையே. தலைமுறை தலைமுறையாய் இவைகளையும் இவைகளை வாங்கிவைத்த உங்களையும் கொண்டாடுவார்.

வாங்கி நீங்கள் வைத்து மகிழ்வதற்கும் நன்கொடை அளித்து மகிழ்விப்பதற்கும் உரிய எங்கள் வெள்ளிக்கலன்களை மனமுவந்து காட்டுகின்றோம், வாருங்கள்.

வெகுமதியளிக்க

வெள்ளிக் கலன்கள் உபயோகத்தாலும் அழகாலும் தனக்குச் சமானமில்லாத் தனிப்பெருஞ் சிறப்பாலும் அழியாத் தன்மையாலும் மிகப் பொருத்தமானவை.

கப் காஸ்கெட் தட்டு, அல்லது ஸெட்டாகச் சேர்ந்த சாமான்கள் எங்களிடத்தில் தயாராக இருக்கின்றன. இவைகளிலிருந்து வாங்கிக்கொண்டாலும் சரி, இஷ்டமான மாதிரிப்படி எங்களிடம் செய்வித்துக்கொண்டாலும் சரி-பெற்றுக்கொள்பவர் தம்பொருட்டுக் கவனம் செலுத்தித் தேர்ந்தெடுத்திருக்கின்றீர்கள் என்று உங்களை மிகவும் பாராட்டுவர்.

அளவற்ற சாமான்கள் எங்களிடத்தில் செய்து தயாராயிருக்கின்றபடியால் நீங்கள் வேண்டியதைத் தேர்ந்துகொள்வது வெகு சுலபம். நாங்களும் உங்கள் தேவைக்குத்தக்கபடி எடுத்துத் தருவோம்.

எங்கள் கொள்கை

யோக்கியமாகவும் கவுரவமாகவும் நாங்கள் சரிவரச்செய்து விர்த்தி யடைகின்ற வைர வியாபாரத்தைப்போலவே இந்த வெள்ளிச் சாமான் டிபார்ட் மெண்டையும் நடத்தி வருகின்றோம். ஒருமுறை எங்களிடம் வெள்ளி பொன் கலன்கள் வாங்குபவர் பொருள்களின் தூய்மையையும் அழகையும் கண்டு பின் எங்களிடமே செல்வர்.

எங்கள் எஸ்டிமேட்

எந்தச் சாமான் எந்த மாதிரியில் வேண்டுமானாலும் கேளுங்கள். டிஸைன்களும் எஸ்டிமேட்டும் அனுப்புவோம்.

உங்கள் ஆதரவை வேண்டுகின்ற

ஸூராஜ்மல் லல்லுபாய் & கோ.,

135, பெரிய பஜார் திரிச்சிராப்பள்ளி. | வைர வியாபாரிகள், நகைகட்டுவோர் பொன்வெள்ளிக் கலன்கள் செய்பவர். | 313, எஸ்பளனேட், சென்னை.

SURAJMAL LALLUBHAI & CO.,

DIAMOND MERCHANTS AND JEWELLERS,
GOLD AND SILVER SMITHS.

135, Big Bazaar, TRICHY. | 313, Esplanade, MADRAS.

வர்த்தமானம்.

பத்திராதிபர் கைதியானார்:—கல்கத்தாவில் நடக்கும் க்ஷத்திரிய ஸமாசார் என்னும் வாரப்பத்திரிகையின் ஆசிரியரான ஸ்ரீமான் பரம்சிங், டிசம்பர்மாதத்தில் லஜபதியின் மரணத்தைக் குறித்து எழுதிய வியாசம் ராஜத்துவேஷ முள்ளதென அதிகாரிகள் அவரைக் கைதுசெய்துள்ளார்கள் என்று ஒரு தந்திச் செய்தி கூறுகின்றது.

***

பம்பாய்க் கல்வி இலாகா:—இனிக் கூடவிருக்கு பம்பாய்க் கல்வி இலாக்காக் கூட்டத்தில், கட்டாய முறையில் மாணவர்களுக்குத் தேகாப்பியாசம் அளிக்கவேண்டுமென்னும் விஷயம் யோசித்து முடிவுசெய்யப்படும். போதிய தேகப்பயிற்சி யில்லாது இப்பொழுதுமாணவர்கள் உடல் உரமில்லா திருக்கின்றனர் என்று ஸினேட் அங்கத்தினர்களில் பலர் அபிப்பிராயப்படுகின்றனராம்.

***

ஆப்கானிஸ்தான நிலை:—ஜனவரிமாதம் 11ந்தேதி ஆப்கன் மன்னர் விடுத்த அறிக்கை:— சீர்திருத்த முறைகள் நிறுத்தப்பட்டது. எவரும் ஆங்கில உடை தரிக்கவேண்டுமென்னும் நிர்பந்தமில்லை. துருக்கியில் படித்துவரும்பொருட்டு அனுப்பியபெண்கள் திரும்பி அழைக்கப்படுவார்கள். பெண்கள் முகமூடி போடலாகாதென இடப்பட்ட உத்திரவு ரத்து செய்யப்பட்டது. மீண்டும் வெள்ளிக்கிழமை ரஜா நாளாகும். 50 உலமாக்களைக் கொண்ட சபையே மறுபடியும் மந்திராலோசனைச் சபையாகும். எனினும், அம்மன்னர் அரசை விட்டகன்று கண்டகார் போய்விட்டதாகவும் அவருடைய மூத்த சகோதரர் அமீர் இனயதுல்லா பட்டத்திற்குவந்ததாகவும் இன்றையச்செய்தி கூறுகின்றது.

***

குஜரத் கல்லூரி வேலைநிறுத்தம்:—குஜரத் கல்லூரி மாணவர்கள் சைமன் கமிஷன் பகிஷ்காரத்தில் சேர்ந்தனரென்று கல்லூரித் தலைவர் அபராதம் விதிக்க மாணவர்கள் வேலைநிறுத்தம் செய்துள்ளார்கள் என்று தெரிகின்றது. வேலை நிறுத்திய மாணவர் கூட்டத்தில் காந்தியடிகள் பேசுகையில் மாணவர் செய்தது நியாயம் என்றும், எவரும் இடையில் முதுகுகாட்டி ஓடாதிருப்பின் வெற்றி கிடைக்குமென்றும், அரசியலில் மாணவர் சேர்ந்து நாட்டு விடுதலைக்கு உழைத்தல் நியாயமென்றும் கூறினர். ஸ்ரீமான் நாரிமன் வேலை நிறுத்த மாணவர்களுக்கு ஆதரவு தந்து வருகிறார்.

***

துருக்கியில் அராஜக முயற்சி:—துருக்கி அரசாங்கத்தார், ஜனங்களினிடம் நாகரிகமும், கல்வி வளர்ச்சியும் ஏற்படவேண்டிச்செய்யும் முயற்சி இஸ்லாம் மதத்திற்கு ஏற்றதாயில்லை என்று சிலர் அரசாங்கத்திற்கு விரோதமாய் இரகசிய இயக்கங்களைக் கிளப்பி வந்தனர். இதை அரசாங்கத்தார் அறிந்து அவ்வியக்கம் வளராது தடுக்கப் பலரைக் கைது செய்துள்ளனர். புரோஸா, ஸிவஸ் என்னுமிடங்களில் சந்தேகத்தின்பேரில் பலர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று தெரிகிறது. அராஜகக்காரர்களுக்குக் கடுமையான தண்டனை விதிக்கப்படுமென்று தெரிகிறது.

***

சைவசித்தாந்த சபை:—திருநல்வேலியில் உள்ள சைவசித்தாந்த சபையின் வருஷக்கூட்டம் டிசம்பர் மாதம் திருநல்வேலியில் மேற்படி சபையின் மண்டபத்தில் கூடியது. கூட்டமுடிவில், மாணவர்களுக்குச் சைவசித்தாந்தத்தைப்போதிக்க மடாதிபதிகள் முயலவேண்டும் என்றும், கிறிஸ்தவப்பாதிரிகள் மதப்பிரசாரம் செய்வதுபோல் தமிழ்நாட்டு மக்களிடம் சைவசித்தாந்தத்தைப் போதிக்க முயற்சி எடுக்கவேண்டுமென்றும் தீர்மானங்கள் செய்யப்பட்டன. இவ்வருஷம் சைவசித்தாந்த மஹாநாடு ஒன்றைக் கூட்டவேண்டுமென்றும் ஒரு தீர்மானம் செய்யப்பட்டது.

***

தென்னாட்டில் ஹிந்தி பிரசாரம்:—'ஸ்ரீமான்களான பாபு ராஜேந்திரப்பிரஸாதும், ஜம்னாலால் பஜாஜூம் தென்னாட்டில் ஹிந்திப்பிரசார முயற்சிசெய்வதற்காக ஜனவரிமாதம் 20-தேதி யன்று சென்னைவருவார்கள். பிறகு தஞ்சை, கும்பகோணம் திருச்சி, செட்டிநாடு மதுரை தூத்துக்குடி, கள்ளிக்கோட்டை, எரணாகுளம், மதுரை, கொச்சி, கோயம்புத்தூர் சேலம், மங்களூர், நெல்லூர், குண்டூர், பெஸவாடா, ராஜமகேந்திரம் காக்கினாடா முதலிய விடங்கள் சென்று பிரசங்செய்து தங்கள் பிரசாரவேலையைப் பிப்பரிவரி மாதம் முடித்துக்கொண்டு மார்ச்சுமாதம் தங்கள் ஊருக்குச் செல்வார்கள்.' என்று ஸ்ரீமான் ஸி. ராஜகோபாலாச்சாரியார் எழுதுகின்றார்.

***

இந்தியாவில் மேனாட்டு அறிஞர்:-மிஸ்டர் M இலீட் என்னும் மேனாட்டு அறிஞர் ஜனவரி மாதம் 4-ந்தேதி கல்கத்தா வந்துள்ளார். அவர் பொதுவாய் இந்திய வேதாந்தங்களையும் யோகநூல்களையும் படித்துச் செல்ல இந்தியா வந்துள்ளார். பத்திரிகை நிருபர் ஒருவரிடம் அவர் கூறியதாவது:— உலகத்திற்கெல்லாம் தத்துவ அறிவை இந்தியாவேதந்துள்ளது. கீழ்நாட்டுப் பல மதங்களும், அம்மதத்தினது தத்துவங்களும், இந்தியப் பெரியோரிடமிருந்து கடன் வாங்கியதேயாகும். இந்தியாவினிடமிருந்து மேல்நாடு இன்னும் பல கற்க வேண்டியிருக்கின்றது. எனவே சீக்கிரத்தில் ஐரோப்பிய நாடுகளிலிருந்து அறிஞர் பலர், இந்தியாவிற்கு மாணவராய் வருவர் என்பதிற் சிறிதும் சந்தேகமில்லை.

அவர் கல்கத்தா அரசாங்கக்கல்லூரி ஆசிரியரான தாஸ்குப்தா என்பவரிடம், வேதநூல்களையும் யோக நூல்களையும், படிப்பார் என்று தெரிகிறது.

***

பர்மாவும் சைமன் கமிஷனும்:—பர்மா ஐரோப்பிய வர்த்தகச் சங்கத்தில் சைமன் கமிஷன்விஷயமாக ஸர் சார்லஸ் இன்ஸ் கூறியதாவது:—பர்மாச் சட்டசபையார்சைமன்கமிஷனுடன் ஒத்துழைப்பதென்றுசெய்த தீர்மானம் எனக்குமகிழ்ச்சியைத்தருகிறது. இந்தியர் கமிஷனில் இல்லையென்ற காரணத்தால் இந்தியாவில் சிலர் கமிஷனைப் பகிஷ்கரிக்கின்றனர். அது சரியா, தப்பா என்பதைப்பற்றிநான் ஒன்றும்சொல்லவிரும்பவில்லை. இந்தியர்க்கு இடமிலாக் கமிஷனில் பர்மியருக்கும்இடமிராது. பர்மாவைஇந்தியாவினின்றுபிரிப்பதா இல்லையா என்பதே இப்பொழுது பர்மாவில் இருந்துவரும் பிரச்னையாகும். இவ்விஷயத்தில் பக்ஷபாதமில்லாத முடிவுசெய்ய, இந்தியரும் பர்மியரும் கமிஷனில் இல்லாதிருப்பதே நல்லது. ஆகவே பர்மியர் கமிஷனுடன் ஒத்துழைக்கவேண்டும். பிரிக்கவேண்டுமென்னும் கட்சியினருக்கும், வேண்டாமென்பாருக்கும், தங்கள் தங்கள் கட்சிகளைச் சொல்லிக்கொள்ள இதுபோன்ற சந்தர்ப்பம் இனி வாய்க்காது என்பதைப் பர்மா வாசிகளுக்கு எடுத்துக் காட்ட விரும்புகின்றேன். இந்தியாபோல் இங்குப் பகிஷ்காரநிகழ்ச்சிகள் நடவாதிருக்கவேண்டும்.

KALANILAYAM.
REG. NO. M, 2324.

கலா நிலயம்

1928 வருஷத்திய பிரதிகள் முழுவதும் பைண்ட் செய்தும் செய்யாமலும் எங்களிடம் கிடைக்கும்.

அதனிலடங்கிய முக்கியமாயகட்டுரைகள் தொடர்ச்சியாய் வந்தன:—சேக்கிழாரும் திருக்கண்ணப்பரும், கம்பராமாயணம். தமிழ்ப்பாடம், அகப்பொருள் வரலாறு, காந்திமதியென்னும் செந்தமிழ் நாவல், தேவாரமும் ஐந்திணையும், கிரேக்க தத்துவ சாஸ்திரங்களின் விளக்கம், இவைதவிர கார்லைல் ரஸ்கின் எமர்ஸன் முதலிய ஆங்கிலப் புலவர் கட்டுரைகளின் மொழிபெயர்ப்பு. இன்னும்பல விஷய விஷயங்கள் அவ்வப்போது வந்தவை எண்ணிறந்தன.

விலை:—தபால் சார்ஜ் உள்பட:—

பைண்ட் செய்யாதது உள்நாட்டிற்கு ரூ 8-0-0.
வெளிநாட்டிற்கு 9-8-0.

ஆப்லெதர் கில்ட் பைண்ட்,
உள்நாட்டிற்கு ரூ. 10-0-0.
வெளிநாட்டிற்கு ரூ. 11-8-0.

புல் காலிகோ கில்ட் பைண்ட்,
உள்நாட்டிற்கு ரூ. 9-8-0.
வெளிநாட்டிற்கு ரூ. 11-0-0.

வேண்டுவோர் முன்னதாகப் பணம் அனுப்பிக் கேட்கவும்.

மானேஜர்,
11, வெள்ளாளர் தெரு,
புரசைபாக்கம், சென்னை.

உ

வியாஸங்கள்.

வியாஸங்கள் ! வியாஸங்கள்! !

வியாஸங்கள் மிக எளிதில் அறிந்து அதன்படி நடந்து நன்மையடையக் கூடியவிதமாக எழுதப்பட்டுள்ளன.

கீழ்கண்ட வியாஸங்கள் ஒவ்வொரு தமிழரும் வாங்கி வாசித்துப் பயனடையக் கூடியனவாகும். நமது முன்னோர்களுடைய உபதேசங்கள் பலவற்றை நம்மில் பலர் அறியாமலிருக்கிறார்கள். காரணம், அவையாவும் செய்யுளாக இருப்பதினால். இந்த வியாஸங்கள் அச்செய்யுட்களையே பெரும்பாலும் தழுவி வசனமாக எழுதப்பட்டிருக்கின்றன.

	ரூ.	அ.		ரூ.	அ.
அன்பு	0	1	பொதுமதம்	0	2
பலவகை மனிதர்	0	1	ஆரூதாரம்	0	2
தவம்	0	1	சந்தேகம்	0	2
பொறுமை	0	1	கற்பு	0	3
இருவினை	0	2	அஸ்தபூஷணம்	0	4
இல்லறம்	0	2	பதினாறுபேறு	0	4
ஆலயவழிபாடு	0	2	என் தந்தையார்	0	6

மேல்கண்ட பதினான்கு புத்தகங்களையும் ஒரே தடவையில் வாங்குபவர்களுக்கு ரூபாய் இரண்டுக்குக் கொடுக்கப்படும்.

தபால் சார்ஜ் இனாம்.

இன்றே எழுதுங்கள் !

நவீனகதா புத்தகசாலை,
மங்கமாரி வீதி, இரங்கூன்

189038

A MOMENTOUS BOOK

ANCIENT JAFFNA

BY

Mudaliar C. RASANAYAGAM C. C. S.

WITH AN APPRECIATIVE FOREWORD

BY

Professor S. KRISHNASWAMI AIYANGAR, M. A.

An authentic History of North Ceylon, particulary of Jaffna, based on archeological Epigraphic and Linguistic researches is stated here for the first time in a connected logical manner from ancient times up to the occupation of the island by the Europeans. The progress of civilisation in Ceylon and Southern India and incidentaly in other countries associated with them as brought out here reads like a romance without infringing on the cannons of Historic Research. The Honest patriotism of the author is inspiring without misleading.

Every student of History would read this book with pleasure and profit,

Price Rs. 5-8-0. (V.P. Charges extra)

MANAGER:—

"KALANILAYAM"
11, VELLALA STREET.
Purasawalkam, MADRAS.

Printed at the B. N. Press, Mount Road and Published by Mr. E. Kumariah, B.A., B.L. (Editor)